வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
பக்கங்கள் : 16
விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu

26.01.2021 செவ்வாய்க்கிழமை






04

அபாய கட்டத்தில் நாடு!



06

மார்ச் மாதத்திலேயே தடுப்பூசி



08

சாதிக்க முயற்சியா சதி நாடகமா?



10

அரசாங்கம் நாளை ஐ.நாவுக்கு பதில்

## தொடரும் மீறல்கள்! பிரிட்டன் கவலை

லண்டன், ஜன. 26

இலங்கையின் மனித உரிமைகள் மீறல் தொடர்பில் பிரிட்டன் ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளது. இலங்கைக் கான பிரிட்டன் தூதுவர் சாரா ஹல்டன் ருவிட்டர் தனது ருவிட்டர் பதிவின்மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களைக் கட்டாய மாக எரிக்கும் நடைமுறை உட்பட இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பான விடயங்களில் பிரிட்டன் அவதானமாக உள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பான ஐ. நா. அறிக்கை அடுத்த வாரம் வெளியிடப்பட வுள்ளது. இதன்போது,

02

### கொரோனாவால் இறந்தோரின்

# உடல் கட்டாய தகனம்: முடிவுக்கு வரவேண்டும்

### ஐ.நா. நிபுணர்கள் எச்சரிக்கை

United Nations Human Rights

ஜெனிவா, ஜனவரி 26

கொரோனா தொற்றால் இறந்தவர்களின் உடல்களை கட்டாயமாக தகனம் செய்யும் நடவடிக்கையை இலங்கை உடனடியாக முடிவுக்கு கொண்டுவர வேண்டும். இந்த நடைமுறை முஸ்லிம்கள் மற்றும் சிறுபான்மையினரின் நம்பிக்கைகளுக்கு முரணானது. தற்போதுள்ள தப்பான எண்ணங்கள், சகிப்பு தன்மையின்மை, வன்முறைகளை இது தூண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் நிபு ணர்கள் எச்சரித்துள்ளனர்.

02

## வடக்கில் 21 தொற்றாளர்!

### கிளிநொச்சி வளாகத்தின் மாணவனுக்கும் தொற்று

யாழ்ப்பாணம், ஜன. 26

வடக்கு மாகாணத்தில் நேற்று 21 பேர் தொற்றாளர் களாக அடையாளம் காணப் பட்டனர். இவர்களில் ஒருவர் யாழ். பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தில் தொழில்நுட்ப பிரிவில் பயி லும் மாணவன் என்று தெரிய வந்துள்ளது.

சாவகச்சேரி மருத்துவ

02

## கொரோனா தடுப்பூசி பெற 54 வீதமானோரே ஆர்வம்!

### கருத்துக் கணிப்பில் தகவல்

கொழும்பு, ஜன. 26

கொரோனா தடுப்பூசியை ஏற்றிக்கொள்வதற்கு 54வீத மான மக்களே விருப்பம் தெரி வித்துள்ளனர் என்று கருத்துக் கணிப்பில் தெரிய வந்துள்ளது. அத்துடன், இனவாரியாக 50 வீதமான தமிழர்களும், 59வீதமான முஸ்லிம் களும், 55 வீதமான

02

## ரூ. 100ஐ தாண்டாது!



### சம்பா அரிசியின் விலை மூன்று ஆண்டுகளுக்கு

கொழும்பு, ஜன. 26

சம்பா அரிசியின் விலை அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு நூறு ரூபாவை தாண்டா மல் பேணுவதற்கு நட வடிக்கை எடுக்கப்பட்

02

## நாட்டின் 75 வீத பகுதி தமிழருக்கே சொந்தம்!

### மகாவம்சமே ஆதாரம் என்கிறார் யோகேஸ்வரன்



மட்டக்களப்பு, ஜன. 26

மகாவம்சத்தின்படி நாட்டில் 75 வீதத்துக்கு மேல் தமிழர்களுக்கு உரித்தான பகுதி. தமிழர்களின் தொல்பொருள் அடங்கிய, அனு ராதபுரம், பொலநறுவையை தமிழன் ஆண்டிருக்கின்றான். ஆகவே, இந்தப் பகுதிகள்

02

## நேற்று நால்வர் தொற்றுக்கு பலி!

கொழும்பு, ஜன. 26

கொரோனா தொற்றால் நேற்று நான்கு மரணங்கள் பதி வாகின என்று அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்தது.

களுத்துறை - பேருவளை யில் 49 வயது பெண்ணும், கேகாலை - தெரணிகலையில் 43 வயது பெண்ணும் கொழும்பு மாவட்டத்தை சேர்ந்த 71, 76 வயதான இரு ஆண்களும் நேற்று உயிரிழந்தனர்.

இதனால், நாட்டில் கொரோனா தொற்று

02

## கொரோனா தடுப்பூசி வழங்கல்: முன்னுரிமைப் பட்டியல் தயார்!

### என்கிறார் இராணுவத் தளபதி



கொழும்பு, ஜன. 26

நாட்டில் தடுப்பூசி பெறு வோரின் முன்னுரிமைப் பட்டி யல் இறுதி செய்யப்பட்டுள்ள தாக கொரோனா தடுப்புக் கான தேசிய செயல்பாட்டு மையத்தின் தலைவரும்

02




## சுரேஷ் பிறேமசந்திரன் ஓர் அரசியல் விபச்சாரி

### கஜேந்திரகுமார் எம்.பி.

யாழ்ப்பாணம், ஜன. 26

சுரேஷ் பிறேமசந்திரன் ஓர் அரசியல் விபச்சாரி என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பின ருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

02

### இந்திய மீனவர்களை கண்டித்து:

# யாழ்ப்பாணத்தில் நாளை போராட்டம்

### கடற்றொழிலாளர் சம்மேளனம் அழைப்பு



யாழ்ப்பாணம், ஜன. 26

இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய செயல்பாடுகளை கண்டித்து நாளை புதன் கிழமை யாழ்ப்பாணத்தில் கவனவீர்ப்பு போராட்டம் இடம்பெறவுள்ளது. இந்தப் போராட்டத்திற்கு அனைத்துத் தரப்பினரும் பங்கேற்க வேண்டும் என்று யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சம்மேளன தலைவர் அன்ன

02

## உடல் கட்டாய...

கொரோனாவால் மரணிப்போரின் உடல்களை கையாள ஒரே வழி தகனமே என்று திணிப்பது மனித உரிமை மீறலுக்கு சமம். இறந்த உடல்களை அடக்கம் செய்வது கொரோனா போன்ற தொற்று நோய்கள் பரவும் அபாயத்திற்கு வழி வகுக்கும் என்பதற்கு மருத்துவ அல்லது அறிவியல்பூர்வமான சான்றுகள் எவையும் இல்லை.

ஐ.நாவின் மத சுதந்திரம் அல்லது நம்பிக்கையின் சிறப்பு அறிக்கையாளர் அஹமட் சஹீட், சிறுபான்மையினர் குறித்த சிறப்பு அறிக்கையாளர் பேணார்ட் டிவரென்னஸ், அமைதியான சட்டவாக்க சபை குறித்த அறிக்கையாளர் கிளெமன்ட் நயாலெட்டோஸி, அனைவருக்குமான உரிமையில் உடல், மன ஆரோக்கியம் பற்றிய அறிக்கையாளர் திருமதி ட்லேங் மொபோகெங் ஆகியோரே மேற்கண்ட விடயங்களை வலியுறுத்தியுள்ளனர்.

நேற்று வெளியான இவர்களின் அறிக்கையின்படி, கடந்த 21ஆம் திகதி வரை 274 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன. இதில் கணிசமான இறப்புக்கள் சிறுபான்மை இன, மதங்களை சேர்ந்தவர்களுடையவை.

தொற்றால் இறந்தவர்களின் உடல்கள் குடிதண்ணீரை மாசுபடுத்தும் என்று தலைமை தொற்றுநோயியல் நிபுணர் உட்பட ஆதாரம் இல்லாத கருத்தை வெளியிடுகின்றனர். பாகுபாடு, ஆக்கிரமிப்பு ஊடாக சிறுபான்மையினரை துன்புறுத்துவதற்கு சமமாக முஸ்லிம்களை அரசு நடத்து கிறது. அவர்கள் மீதான தப்பான எண்ணம், சகிபாத்தன்மை, பதற்றங்கள், வன்முறைகள் மேலும், வெறுப்பையும் வன்முறை யையும் தூண்டலாம். இலங்கையில் அடக்கம் செய்வதற் கான விருப்பங்களை ஆராயுமாறு ஜனா திபதியும் பிரதமரும் அறிவுறுத்தினர் என்று நிபுணர்கள் குறிப்பிட்டனர். ஆனாலும், அடக்கம் செய்வதற்கான பரிந்துரைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன என்று நாம் கவலையடைகிறோம் கொரோனா தொற்றால் இறந்தோ ரின் உடல்களை கட்டாயமாக தகனம் செய்வதை அரசு நிறுத்த வேண்டும் - என்றுள்ளது. (ஐ)

## ரூ. 100ஐ...

டுள்ளது. இது எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும். அத்துடன், மா, பருப்பு, கடலை, சீனி, டின்மீன், நெத்தலி பொருட்களின் விலைகளை பெப்ரவரி முதல் ஜூலை வரை மாற்றம் ஏற்படாது பேணப்படும் என்று வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

தேசிய உற்பத்தி ஊக்குவிப்பு நடவடிக்கைகள், கொவிட் -19 நெருக்கடி நிலைமைகள் மக்களுக்கு இலகுவான முறையில் அத்தியாவசிய பொருட்களை பெற்றுக்கொடுக்கும் வேலைத்திட்டங்கள் குறித்து தெரிவிக்கும்போதே அவர் இதனை கூறினார்.

மேலும், எதிர்வரும் பெப்ரவரி மாதத்தில் இருந்து அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு நாட்டில் சம்பா மற்றும் நாட்டரிசியின் விலை நூறு ரூபாவுக்கு மேல் அதிகரிக்காத வகையில் கடைப்பிடிக்க அரசாங்கம் தீர்மானம் எடுத்துள்ளது. இதேபோல் வெளிநாட்டில் இருந்து அரிசி இறக்குமதி செய்வதும் நிறுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் இலங்கையிலேயே தேவையான அரிசியை உற்பத்தி செய்யவும், தேசிய விவசாயிகள், வியாபாரிகளின் கரங்களை பலப்படுத்தவும் இந்த மாற்றங்கள் செய்யப்பட் டுள்ளன.

இதேபோல் மா, பருப்பு, கடலை, சீனி, டின்மீன், நெத்தலி ஆகிய அத்தியாவசிய உணவுப்பொருட்களின் விலையில் மாற்றங்கள் ஏற்படாத வகையில் வியாபாரிகளுடன் அரசாங்கம் உடன்படிக்கை ஒன்றை செய்யவுள்ளது. இதுவும் எதிர்வரும் பெப்ரவரி 1 ஆம் திகதி தொடக்கம் ஜூலை மாதம் வரையில் விலைப்பட்டியலில் மாற்றங்கள் ஏற்படாத வகையில் கடைப்பிடிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றார். (ஐ)

## கொரோனா...

சிங்களவர்களும், 68 வீதமான பறங்கியர்களும் தடுப்பூசியை ஏற்றிக்கொள்ள ஆர்வம் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் நாளை வியாழக்கிழமை முதல் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. இந்நிலையில், சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் நடத்தை ஆராய்ச்சிப் பிரிவு மக்களிடையே கருத்துக் கணிப்பு ஒன்றை நடத்தியது.

895 பேரிடம் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில், 55 சதவீத ஆண்களிடமும், 81 சதவீத பெரும்பான்மையினத்தவரிடமும் 63 சதவீதத்தை சேர்ந்த மேல் மாகாணத்தை சேர்ந்தவர்களிடமும், 73 சதவீதமான பட்டதாரி அல்லது பட்டக் கல்வியைத் தொடர்வோரிடம் இந்தக் கருத்துக் கணிப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மேலும், இவர்களில் 80 வீதமானோர் தொழில் புரிபவர்களாகவும் 27 சதவீதமானோர், சுகாதார சேவைகள் பிரிவைச் சேர்ந்தவர்களாகவும் 51 சதவீதமானோர், ஒரு இலட்சம் ரூபாய்க்கும் மேற்பட்ட வருமானத்தைப் பெறுபவர்களாகவும் உள்ளனர். தவிர, 99.3 சதவீதமானவர்கள், பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு, கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகாதவர்கள் என்று அடையாளம் காணப்பட்டவர்கள் ஆவர்.

கருத்துக்கணிப்புக்கு உட்படுத்தப்பட்ட 54 சதவீதமானோர், தங்களுக்கு வழங்கப்படும் பட்சத்தில், தடுப்பூசியைப் போட்டுக்கொள்ளும் விருப்பத்தில் உள்ளனர். 38 சதவீதமா னோர், இதைப் போட்டுக்கொள்வதா இல்லையா என்னும் குழப்பத்தில் உள்ளனர். 8 சதவீதமானோர், இந்தத் தடுப்பூசியை போட்டுக்கொள்ளப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளனர்.

பாலின அடிப்படையில், 34 சதவீதமான ஆண்கள், தடுப்பூசியை ஏற்பதில் குழப்பநிலையில் உள்ளனர். 43 சதவீதமான பெண்களும், இந்தக் குழப்பத்திலேயே உள்ளனர்.

55 சதவீத பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள், தடுப்பூசியைப் போட்டுக்கொள்ளும் எண்ணத்திலேயே உள்ளனர். அதேபோன்று, 50 சதவித தமிழர்களும், 59 சதவீத முஸ்லிம்களும், 56 சதவீத பரங்கியர்களும் 68 சதவீத மற்றைய இனத்தைச் சேர்ந்தவர்களும், தடுப்பூசியைப் போட்டுக்கொள்ளும் எண்ணத்திலேயே உள்ளனர் - என்றும் தெரிய வந்தது. (ஐ)

## கொரோனா தடுப்பூசி...

இராணுவ தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

நாட்டில் கொரோனா தடுப்பூசி ஏற்றும் பணிகள் இந்த மாத இறுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளன. இந்நிலையில் தடுப்பூசி ஏற்றும் திட்டம் குறித்து நேற்று அவர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையில் தெரிவித்தவை வருமாறு:

தடுப்பூசி வழங்குவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்தியாவிலிருந்து கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு வரும் தடுப்பூசிகள் பலத்த பாதுகாப்புடன் இராணுவத்தினரால் எடுத்து வரப்பட்டு கொழும்பில் ஓர் இடத்தில் சேமித்து வைக்கப்படும்.

இதன்பின்னர் ஜனாதிபதியின் ஆலோசகர் லலித் வீரதுங்கவின் கீழ் உள்ள பணிக்குழு தடுப்பூசியை வழங்குவதற்கான நிலையங்களுக்குக் கொண்டு செல்வது மற்றும் சேமிப்பது தொடர்பான அனைத்து செயல்பாடுகளையும் கையாளும்.

பின்னர், கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ள முன்னணி தொழிலாளர்களுக்குத் தடுப்பூசிகள் வழங்கப்படும். அத்துடன் தடுப்பூசிகளைக் களஞ்சியப்படுத்த ஏதுவான இடங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன். இந்நிலையில் அந்த இடங்களுக்குத் தேவையானோர் வரவழைக்கப்பட்டு அவ்விடங்களிலேயே தடுப்பூசி வழங்கப்படும். மாறாக ஒவ்வொரு இடங்களுக்கும் எடுத்துச் சென்று தடுப்பூசி வழங்கப்படமாட்டாது - என்றும் கூறினார். (ஐ)

## வடக்கில்...

அதிகாரியின் அறிவுறுத்தலின்படி யாழ்ப்பாணத்துக்குள் வரும் வாகனங்களின் சாரதிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர் இதன்போது, நால்வர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர்.

இந்நிலையில், நேற்று யாழ். போதனா வைத்தியசாலை, யாழ். பல்கலைக்கழக ஆய்வுகூடங்களில் 580 மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட் டன.

இதன்போது 12 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். இவர்களில் எண்மர் வடக்கை சேர்ந்தவர்கள் என்றும் நால்வர் தென்னிலங்கை பகுதியை சேர்ந்தவர்கள் என்றும் தெரிய வருகின்றது.

அடையாளம் காணப்பட்டவர்களில், இருவர் மன்னாரையும், ஒருவர் கிளிநொச்சி வளாகத்தில் கல்வி கற்கும் மாணவர் என்றும் தெரிய வந்தது.

இந்நிலையில், வவுனியா நகரின் வர்த்தக நிலையங்களில் பணியாற்றுவோருக்கு நடத்தப்பட்ட பரிசோதனை முடிவுகளில் ஒரு தொகுதி நேற்று வெளியானது. இதன்படி 13 பேர் புதிய தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். (ஐ)

## சுரேஷ்...

தெரிவித்துள்ளார்.

அவரின் கட்சியின் தலைமை அலுவலகமான கொக்குவிலில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு கூறினார்.

அண்மையில், சுரேஷ் பிறேமசந்திரன் நடத்திய ஊடக சந்திப்பில், ஐ.நாவுக்கான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் சேர்ந்து தயாரித்த வரைவில் இனப்படுகொலை என்ற வசனம் உள்ளடக்கப்படவில்லை. சர்வஜன வாக்கெடுப்பை கஜேந்திரகுமார் விரும்பவில்லை என்று பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார்.

இந்நிலையில், நேற்று கஜேந்திரகுமார் நடத்திய ஊடக சந்திப்பில் தன் மீதான குற்றச்சாட்டுக்களை நிராகரித்தார். இதன்போதே சுரேஷ் பிறேமசந்திரன் ஓர் அரசியல் விபச்சாரி என்று கடுமையாக விமர்சித்தார்.

அத்துடன், தமிழர்களின் போராட்டத்தை சுரேஷ் காட்டிக் கொடுத்தார் என்றும் பல குற்றச்சாட்டுக்களை இதன்போது கஜேந்திரகுமார் எம்.பி. வெளியிட்டார். (ஐ)

## நாட்டின் 75 வீத...

தமிழர்களுக்குரியது. இந்து ஆலயங்களை தொல்பொருளின் பெயரால் அழிப்பதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்", என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சீ. யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று அவர் நடத்திய ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், இந்து ஆலயங்களை இடித்து விகா ரைகளை கட்டுவதை அரசாங்கங்கள் வழக்கமாகக் கொண்டுள்ளன. தொல்பொருள் என்று மையப்படுத்தினால் அது பொதுவாக இருக்கவேண்டும். அங்கு ஏன் பௌத்த விகாரை அமைக்க வேண்டும்? இந்த நாட்டின் வரலாறு மற்றும் மகாவம்சத்தின் கருத்தின்படி இந்த நாட்டின் 75 வீதத்துக்கு மேலான பகுதி தமிழர்களுக்கு உரித்தானது. ஏன் மகாவம்சம் கூட சொல்கின்றது அநுராதபுரத்தை ஆண்ட எல்லாளன் மன்னனை துட்டகைமுனு மன்னன் அவனைக் கொன்று அந்த இடத்தை கைப்பற்றியது என்று. அவரை கொல்ல செல்லும் போது 32 தமிழ் சிற்றரசர்களை கூட்டிச் சென்றான் என்று சொல்கின்றது. எனவே, 32 இடங்கள் அந்த காலத்தில் தமிழரின் கையிலே இருந்துள்ளது.

இலங்கையின் முதலாவது மன்னன் இராவணன் அவனுக்குபின் குபேரன் ஆண்டான் இலங்கையின் கடைசிமன்னன் இராஜசிங்கம் என்கின்ற கண்ணுச்சாமி அவனும் ஒரு தமிழன்தான். எனவே, நாங்கள் அநுராதபுரத்தை, பொலநறுவையை கேட்டோமா? அங்கு எங்களின் தொல்பொருட்கள் உள்ளன.

ஏன் தமிழ் மக்களின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இந்து மக்களின் வாழ்விடங்களை தொல்பொருள் என்றவகையில் பறிக்கிறீர்கள். கோட்டபாய ராஜபக்ஷ அரசாங்கம் மிகமோசமான கீழ்தரமான செயலை செய்கின்றது. இதனை ஏற்கமுடியாது - என்றார். (ஐ)

## நேற்று நால்வர்...

மரணம் 287ஆக உயர்ந்தது.

இதேவேளை, நேற்று மட்டும் 737 பேருக்கு கொரோனா தொற்றியது. இதனால் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 59 ஆயிரத்து 167ஆக உயர்ந்தது.

தொற்று சந்தேகத்தின் அடிப்படையில் 683 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர். (ஐ)

## தொடரும் மீறல்கள்...

பிரிட்டனின் அணுகுமுறைகள் குறித்து ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு அறிவிக்கப்படும் என்றும அவர் கூறியுள்ளார்.

## யாழ்ப்பாணத்தில்...

ராசா அழைப்பு விடுத்துள்ளார்.

எமது நாட்டின் கடல்பரப்பில், இந்திய மீனவர்களின் அத்துமீறிய செயல்பாட்டால், வடக்கு மீனவர்கள் தொடர்ச்சியாக பாதிக்கப்படுகின்றனர். எனினும், அத்துமீறி வந்த இந்திய மீனவர்களுக்கு ஏற்பட்ட அசம்பாவிதத்தில் பலியான நால்வருக்கும் எமது அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

தொடர்ச்சியாக இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை இந்த அரசாங்கம் தடுத்து நிறுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுக்கிறோம். இதை மேலும், வலியுறுத்தும் விதமாக நாளை புதன்கிழமை யாழ்ப்பாண நகரில் மாபெரும் கண்டனப் பேரணியை நடத்தவுள்ளோம்.

யாழ். பண்ணை சுற்று வட்டத்தில் இருந்து ஆரம்பிக்கும் இந்தப் பேரணி, கடற்றொழில் அமைச்சு, யாழ். இந்திய துணைத் தூதரகம், வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் ஆகிய இடங்களுக்கு சென்று இந்திய மீனவர்கள் அத்துமீறி தடுத்து நிறுத்துமாறு மனுக்களை கையளிப்போம். இந்த ஆர்ப்பாட்டத்தில் அனைத்துத் தரப்பினரும் பங்கேற்று ஆதரவு தருமாறு கேட்டுக்கொள்கிறோம் - என்றார். (ஐ-3)

## தோல்வியுற்ற...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேம்படுத்துவதோடல்லாமல், யுத்தத்திற்கு பின்னர் அடிப்படை மனித உரிமைகளை மேம்படுத்தக்கூடிய காரணிகளை பலப்படுத்தவேண்டும் எனவும் எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

ஆனால், இலங்கை அரசு தனக்கென பல நடைமுறைகளை வகுத்து சர்வதேச சமூகத்தின் ஆக்கபூர்வமான யோசனைகளை புறந்தள்ளியுள்ளதையே அவதானிக்க முடிகிறது. எதிர்வரும் 46ஆவது ஜெனிவா மனித உரிமை பேரவை மாநாட்டில் இலங்கை தொடர்பாக சர்வதேச சமூகம் கொண்டுவரக்கூடிய அழுத்தங்கள் வடக்கு-கிழக்கு பிரதேசங்களுக்கு மாத்திரமல்ல. முழு இலங்கைக்குமே ஜனநாயக விழுமியங்களை பலப்படுத்தி, அடிப்படை மனித உரிமைகளை மேம்பட வைப்பதாக அமைந்திருக்கும் என்றே கருதலாம்.

ஈழநாடு
Eelanadu
26.01.2021 செவ்வாய்க்கிழமை
சார்வரி, தை 13

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**e-mail: editor@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

# மிலிந்த மொறகொட ‘அவுட்’?

முன்னாள் அமைச்சரும் ‘பாத் பைன்டர் பௌண்டேசன்’ என்னும் முதன்மை சிந்தனைக் கூடத்தின் ஸ்தாபகருமான மிலிந்த மொறகொட, கடந்த ஆண்டு இந்தியாவிற்கான புதிய தூதுவராக ஜனாதிபதியால் அறிவிக்கப்பட்டிருந்தார். ஆனால், இவர் சாதாரணமான தூதுவராக அறிவிக்கப்படவில்லை. மாறாக, அமைச்சரவை அந்தஸ்துள்ள தூதுவராக அறிவிக்கப்பட்டிருந்தார். இதனைத் தொடர்ந்து உயர் பதவிகளுக்கான பாராளுமன்ற உயர் குழுவும் மொறகொடவின் நியமனத்தை அங்கீகரித்திருந்தது. ஆனாலும், மிலிந்த மொறகொடவை எந்தவோர் இராஜதந்திர மட்ட சந்திப்புக்களிலும் காணவில்லை.

மொறகொட இந்தியாவுக்கான தூதுவராக அறிவிக்கப்பட்ட பின்னர், இந்தியாவின் மிக உயர்மட்டத்தைச் சேர்ந்த இருவர் நாட்டிற்கு செய்திருக்கின்றனர். முதலில், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் டோவால் கொழும்பிற்கு விஜயம் செய்திருந்தார். பின்னர், இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கர் கொழும்பிற்கு விஜயம் செய்திருந்தார். ஆனால், எந்தவொரு சந்திப்புக்களிலும் மொறகொடவை காணவில்லை. இந்த விடயம் ஒரு மர்மம் போல் தொடர்ந்தது. ஆனால், தற்போது அமைச்சரவை அந்தஸ்துடன் கூடிய ஒரு தூதுவரை ஏற்றுக் கொள்வதற்கு புதுடில்லி மறுத்திருக்கும் செய்தி வெளியாகியிருக்கின்றது.

அதாவது, சாதாரண தூதுவராக மிலிந்த மொறகொடவை ஏற்றுக் கொள்வற்குப் புதுடில்லி இணக்கம் தெரிவித்திருக்கின்றது. ஆனால், தற்போது மொறகொட தனக்கு இதில் ஆர்வமில்லையென்று ஜனாதிபதிக்கு அறிவித்திருக்கிறார் என்றும் செய்திகள் வெளியாகியிருக்கின்றன. இதனைத் தொடர்ந்து புதிய ஒருவரை நியமிப்பதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன.

இதற்குப் பின்னால் எவ்வாறான காரணங்கள் இருக்கின்றன என்பது வெளியில் கசியவில்லை. பொதுவாக இராஜதந்திர அணுகுமுறைகளில் ஒரு விடயம் நேரடியாக சுட்டிக்காட்டப்படுவதில்லை. ஒன்றை நிராகரிப்பதற்கு எவருக்கும் நோகாத காரணங்களே கூறப்படும். அவ்வாறுதான் இந்த விடயத்திலும் நடந்ததா?

மிலிந்த மொறகொட விடுதலைப் புலிகளுக்கும் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்திற்கும் இடையிலான பேச்சின்போது முக்கிய பங்காற்றிய ஒருவர். 2005இல் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்ததன் பின்னர் இவர் மீது ஊழல் குற்றசாட்டொன்று சுமத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வெளியேறி ராஜபக்ஷவுடன் இணைந்துகொண்டார். எனினும், அதன் பின்னர் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் தோல்வியடைநதார். அதைத் தொடர்ந்து தேர்தல் அரசியலிலிருந்து ஒதுங்கிக் கொண்டார். ஆனால், இந்தக் காலத்தில் பாத் பைன்டர் சிந்தனைக் கூடத்தின் ஊடாக, சீனா, இந்தியா, ரஷ்யா மற்றும் அமெரிக்கா எனப் பல நாடுகளின் மூலோபாய சமூகங்களுக்கு நெருக்கமாகும் வகையில் தொடர்ச்சியான கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தார்.

இவரது சிந்தனைக் கூடத்தை சீன அரசாங்கம் அங்கீகரித்திருந்தது. அதேவேளை நிதியும் வழங்கியதாகக் கூறப்படுகின்றது. இவ்வாறானதொரு பின்புலத்தில் கடந்த ஆண்டு, 13ஆவது திருத்தச்சட்டத்திற்கு எதிரான நிலைப்பாடொன்றை முன்வைத்து மீளவும் அரசியலுக்குள் பிரவேசித்தார். மாகாண சபை முறைமை இலங்கைக்கு பொருத்தமானதல்ல என்னும் நிலைப்பாட்டை பகிரங்கமாக முன்வைத்து, அதனை நீக்கவேண்டுமென்றும் வாதிட்டார். இவ்வாறானதொரு பின்புலத்தில் தான் இவரை அமைச்சரவை அந்தஸ்துடன் இந்தியாவுக்கான தூதுவராக நியமிக்கும் முடிவை ஜனாதிபதி கோட்டாபய அறிவித்திருந்தார். தற்போது அது இல்லையென்று ஆகிவிட்டது.

இராஜதந்திர ரீதியில் நோக்கினால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு இது ஒரு பின்னடைவே. இலங்கையின் உடனடி அயல்நாடான இந்தியாவிற்கான தூதுவர் ஒருவரை நியமிக்கும் போது எதற்காக அமைச்சரவை அந்தஸ்துடன் நியமிக்க வேண்டுமென்று சிந்தித்திருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு சிந்திக்கவில்லை. அதன் விளைவாகவே புதுடில்லி தற்போது அதனை ஏற்றுக்கொள்ள மறுத்திருக்கின்றது. இதற்கு பின்னால் வேறு ஏதேனும் காரணமொன்று இருக்குமானால் மொறகொடவின் சீன நெருக்கம் ஒரு காரணமாக இருக்கலாம் ஆனால், அது வெளியில் சொல்லப்படப் போவதில்லை.

# ‘தோல்வியுற்ற தேசம்’ என்ற நிலையை நோக்கி நகரும் இலங்கை!

- அலசுவது **இராஜதந்திரி** -

இலங்கை மிகவும் தரம் தாழ்ந்த நிலையை நோக்கி சர்வதேச அரங்கில் சென்றுகொண்டிருக்கிறதென்பதே ஐக்கிய நாடுகள் ஸ்தாபன மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் மிச்சேல் பச்லேட் ஜெனிவாவில் 46ஆவது மனித உரிமைகள் கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பாக சமர்பிக்கவுள்ள அறிக்கை மூலமாக தெரிய வந்துள்ளது. உலகில் பல்வேறு நாடுகள் சர்வதேச சமூகத்தினால் ஓரங்கப்பட்ட நிலையில், ‘தோல்வியுற்ற நாடுகள்’ (failed state) என்றே இனங்காணப்பட்டவையாக இருக்கின்றன.

அரசியல் ரீதியில் குளறுபடியான சூழ்நிலை, மனித உரிமைகள் மீறல் மற்றும் பொருளாதார ரீதியான பின்னடைவுகள் என்பவையே ஒரு தேசத்தை தோல்வியுற்ற தேசமென வரையறை செய்கின்றன.

மத்திய கிழக்கு நாடுகள் சிலவும் ஆபிரிக்க மற்றும் தென்னாபிரிக்க நாடுகள் சிலவும் அவற்றினுடைய அரசியல், பொருளாதார மற்றும் அடிப்படை மனித உரிமைப் பிரச்னைகள் காரணமாக ‘தோல்வியுற்ற தேசங்கள்’ என்று வரையறை செய்யப்பட்டவையாக இருக்கின்றன.

சர்வதேச சமூகத்தின் அறிவுரைகளைப் புறந்தள்ளியமை, ஜனநாயக நடைமுறைகளை பின்பற்றத் தவறியமை உட்பட, பொருளாதார ரீதியாக பின்னடைவுகளை ஏற்படுத்தக்கூடிய காரணிகள் ஏற்படுவதற்கு வழிவகுத்தமை என்பவற்றோடு, அடிப்படை மனித உரிமைகளை மிக மோசமான முறையில் மீறியவையே தோல்வியுற்ற நாடுகளின் அடிப்படைத் தன்மைகளாக இருக்கின்றன.

**அலட்சியப்போக்கு**

இலங்கையில் மூன்று தசாப்த கால யுத்தம் இடம்பெற்றபோதிலும் பின்னர் யுத்தம் முடிவுக்கு வந்ததும் யுத்தத்துக்கான அடிப்படைக் காரணிகளை இனங்கண்டு, அவற்றையே ஜெனிவா மனித உரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பான பிரேரணைகளாகக் கொண்டுவரப்பட்டிருந்தபோது, அப்பிரேரணைகள் இலங்கையின் ஆட்சியாளர்களால் அலட்சியம் செய்யப்பட்ட நிலையில் 46ஆவது ஜெனிவா மனித உரிமைப்பேரவை கூட்டம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் இடம்பெறவுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப்பேரவை ஆணையாளர் மிச்சேல் பச்லட் ஏற்கனவே தாம் இலங்கை தொடர்பாக சமர்ப்பிக்கவுள்ள அறிக்கை குறித்து அறியத்தந்துள்ளார். இந்த அறிக்கையில் அவர் தெரிவித்துள்ள விடயங்கள், இலங்கையை இத்தடவை ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் மனித உரிமை பேரவையில் மிகவும் இறுக்கமான ஒரு நிலைக்கு கொண்டு செல்லுமென கருதக்கூடியதாக இருக்கின்றது.



**இலங்கையின் ஆணைக்குழு**

இலங்கையில் ஆணைக்குழுக்களை நிறுவி உள்நாட்டில் ஏமாற்று வித்தைகளை அங்கேற்றுவதுபோல ஜெனிவாவில் ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையொன்றை இலங்கையில் அடிப்படை மனித உரிமைகள் தொடர்பாக சமர்ப்பிக்க இலங்கை அரசு தயாராகிவருகிறது. இந்நிலையில், ஏற்கனவே இருந்துவருகின்ற ஐ. நா. மனித உரிமை பேரவை பிரேரணைகளை ஏற்பதில் இருக்கக்கூடிய தயக்கம் என்னவென்று சர்வதேச சமூகம் கேள்வி எழுப்பக்கூடிய சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன.

இத்தடவை ஜெனிவாவில் 46ஆவது மனித உரிமை பேரவை மாநாட்டில் இலங்கை அரசு குறித்து எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள் இலங்கையின் ஆட்சியாளர்களையும், யுத்தக் குற்றங்களில் சம்பந்தப்பட்டவர்கள் என்று கருதப்படுபவர்களையும் நாட்டைவிட்டு வெளியேறமுடியாது தடுக்கக்கூடிய நிலமையை ஏற்படுத்துவதோடு, வெளிநாடுகளில் அவர்களுக்கு இருக்கக்கூடிய வங்கிக் கணக்குகள் மற்றும் சொத்துக்கள் என்பவற்றை முடக்கியும் கையகப்படுத்தியும் விடக்கூடிய சூழ்நிலைகளும் பலமாக இருக்கின்றன.

**இலங்கையின் முக்கியத்துவம்**

இவ்வாறு ஒரு கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் பட்சத்தில், இலங்கை சர்வதேச ரீதியாக ஓரங்கட்டப்பட்டு ஒரு தோல்வியுற்ற நாடாகவே வரையறை செய்யப்படும் சூழல்கள் வலுப்பெறும்.

இலங்கையில் உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவதில் சர்வதேச சமூகத்தின் பங்களிப்பும் அதிகமானதாகவே இருந்தது. இதற்கு, இலங்கையின் புவியியல் முக்கியத்துவமும் அதனோடிணைந்த பிராந்திய அரசியல் பொருளாதார முக்கியத்துவங்களுமே முக்கிய காரணங்களாகும்.

இந்நிலையில், இலங்கையரசு யுத்தம் முடிவுக்கு வந்ததும் அதன் அரசியல், பொருளாதார நிலபரங்களை (02ஆம் பக்கம் பார்க்க)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



## பாணந்துறையில் ஒருவர் சுட்டுக்கொலை

கொழும்பு, ஜன. 26

பாணந்துறையில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

வாழைத் தோட்டம் பிரதேசத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் ஒட்டோ ஒன்றில் பயணித்தவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த ஒட்டோவில் பயணித்த நபரொருவர் பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துதார்.

சம்பவம் தொடர்பில் பாணந்துறை வடக்கு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பி.சி.ஆர். சோதனைக்கு மறுப்பு: சுத்திகரிப்பு நிலையத்துக்கு “சீல்”

### பருத்தித்துறை சுகாதார வைத்தியர் நடவடிக்கை

வடமராட்சி, ஜன. 26

**பி.சி.ஆர். பரிசோதனையை புறக்கணித்த வாகன சுத்திகரிப்பு நிலையத்தை பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையால் மூடப்பட்டது.**



பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையால் பிரதேசத்திலுள்ள அதிக ஆபத்து நிலைக்கு உரியவர்களை இனங்கண்டு அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதில், வர்த்தகர்கள், சாரதிகள் வாகன சுத்திகரிப்பு நிலைய ஊழியர்கள் மற்றும் ஆபத்து பிரதேசங்களிலிருந்து திரும்புவோர் என முன்னிலைப்படுத்தப்பட்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த திங்கட்கிழமை பி.சி.ஆர். பரிசோதனைக்காக குறித்த வாகன சுத்திகரிப்பு நிலைய ஊழியர்கள் அழைக்கப்பட்டபோதிலும் அவர்கள் பரிசோதனைக்கு சமுகமளிக்கவில்லை.

இதுதொடர்பாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் குறித்த நிலையத்துக்கு சென்றபோது, அதன் உரிமையாளர், பரிசோதனைக்கு உட்பட மறுப்புத் தெரிவித்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

எனவே, கொரோனா கட்டுப்பாட்டுக்கு ஒத்துழைக்க மறுத்து பி.சி.ஆர். பரிசோதனையில் பங்குபற்றாமையால் எதிர்வரும் நாட்களில் இடம்பெறும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்பட்டு முடிவுகள் கிடைக்கும் வரை அந்த நிறுவனத்தை மூட நடவடிக்கை எடுத்துள்ளதாக பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு தெரிவித்தது.

நாட்டில் கொரோனா தொற்று வேகமாக பரவிவரும் நிலையில் நோய்ப் பரவலைக் கட்டுப்படுத்த சுகாதார திணைக்களத்துக்கு மக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டுமெனவும் இவற்றை மீறும் வகையில் செயல்படுவோர் மீது 1897 ஆம் ஆண்டின் தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு கட்டளைச் சட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார தரப்பினர் தெரிவித்தனர். (ஐ)

## ஸ்கைப் ஊடாக ஷானி சாட்சியம்

கொழும்பு, ஜன. 26

2019 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஈஸ்டர் தாக்குதல்களை விசாரிக்க நியமிக்கப்பட்ட ஆணைக் குழுவில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர சாட்சியம் வழங்கியுள்ளார்.

ஸ்கைப் தொழில்நுட்பத்தின் உதவியுடன் தாக்குதல்கள் குறித்து நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் நேற்று அவர் சாட்சியம் வழங்கினார்.

2013 இல் பிரதிப் பொலிஸ் மா அதிபராகச் செயற்பட்ட வாஸ் குணவர்த்தன உள்ளிட்டோருக்கு எதிராக முன்வைக்கப்பட்டிருந்த துப்பாக்கிகள் தொடர்பான முறைப்பாடுகள் தொடர்பாக உண்மைக்குப் புறம்பான விடயங்களை தெரிவித்த குற்றச்சாட்டில் அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மஹர சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்ட அவருக்கு கடந்த ஆண்டு நவம்பர் மாதம் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

குறித்த வழக்கில் ஷானி அபேசேகர எதிர்வரும் பெப்ரவரி 03 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.




**மேடம்**
தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள். தொகை எதிர்பார்த்தபடியே வந்துசேரும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள்.

**இடபம்**
தட்டுப்பாடுகள் அகலும் நாள். எண்ணங்கள் எளிதில் நிறைவேறும். எதிர்காலம் குறித்து முக்கியமுடிவுகளை எடுப்பீர்கள். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**மிதுனம்**
பக்குவமாகப் பேசிப் பாராட்டுகளைப் பெறும் நாள். விட்டுப்போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம். பணிகளை ஒவ்வொன்றாகச் செய்து முடிப்பீர்கள்.

**கடகம்**
யோகமான நாள். இல்லத்திற்கு தேவையானப் பொருட்களை வாங்குவீர்கள். பொதுவாழ்வில் புதிய பொறுப்புகள் வந்து சேரலாம். முயற்சியில் ஆதாயம்.

**சிம்மம்**
நம்பிக்கைகள் நடைபெறும் நாள். நல்லவர்களின் தொடர்பால் நலம் கிடைக்கும். விட்டுப்போனவரன்கள் மீண்டும் வந்துசேரலாம். உறவினர்கள் பகை மாறும்.

**கன்னி**
தைரியத்தோடு செயல்பட்டு சாதனைகள் படைக்கும் நாள். வியாபாரத்திலிருந்த மறைமுக போட்டிகள் மாறும். வருமானத்தை பெருக்கும் எண்ணம் மேலோங்கும்.

**துலாம்**
விரயங்கள் ஏற்படாதிருக்க விழிப்புணர்ச்சியுடன் செயல்பட வேண்டிய நாள். திட்டமிட்ட பயணமொன்றில் திடீர் மாற்றம் செய்வீர்கள். அனுசரித்து செல்வது நல்லது.

**விருட்சிகம்**
தன்னம்பிகையும் தேவை. சேமிப்பில் சிறிது கரையலாம். எப்படியும் முடிந்துவிடும் என நினைத்த வேலையொன்று முடியாமல் போகலாம்.

**தனுசு**
முன்னேற்றம் அதிகரிக்கும் நாள். உடன் பிறப்புகள் நீங்கள் கேட்டஉதவிகளைச் செய்ய முன்வருவர். வெளிவட்டார பழக்கவழக்கம் விரிவடையும்.

**மகரம்**
செல்வாக்கு மேலோங்கும் நாள். செல்லும் இடங்களில் சிந்தனைவளத்தால் சிறப்படைவீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**கும்பம்**
நட்பால் நன்மை கிட்டும் நாள். நாட்டுப்பற்று மிக்கவர்களால் வீட்டுப்பிரச்சினை அகலும். பயணத்தால் ஆதாயம் உண்டு. குடும்பத்தில் சுபகாரியப் பேச்சு.

**மீனம்**
வருங்கால நலன்கருதி முயற்சி எடுக்கும் நாள். தொழிலில் புதியஒப்பந்தங்கள் வந்து சேரலாம். பூர்வீகசொத்து தகராறுகள் அகலும்.

# கடற்படைக்கு எதிராகத் தீவக மக்கள் மனித உரிமைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜன.26

வேலணை பிரதேச செயலர் பிரிவுட்குட்பட்ட ஜே/11 மண்கும்பான் 5ஆம் வட்டாரத்திலுள்ள தீவகத்திற்கான கடற்படைக்கான பிரதான முகாம் அமைந்துள்ள பொது மக்களுக்குச் சொந்தமான 15 ஏக்கர் காணியை விடுவிக்குமாறு கோரி நேற்று காணி உரிமையாளர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 30 வருடகாலமாக தனியாருக்குச் சொந்தமான குறித்த 15 ஏக்கர் காணியில் தீவகத்துக்கான கடற்படையின் பிரதான முகாம் அமைக்கப்பட்டு காணி கடற்படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

அந்தக் காணியை சுவிகரிப்பதற்குரிய முயற்சி மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் காணி உரிமையாளர்கள் தமது காணியைப் பெற்றுத் தருமாறு கோரி யாழ்ப்பாணம் மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளனர்.

# கொரோனா தொற்றினால் அபாய கட்டத்தில் நாடு!

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 26

உலக சுகாதார நிறுவன ஆய்வின் படி எமது நாடு கொவிட்-19 தொற்றாளர் வீதத்தில் அபாயக் கட்டத்தை எட்டியுள்ளது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொவிட்-19 வீதமானது 5.5 விளிம்பு நிலை வீதத்தைக் கடந்துவிட்டதாக மருத்துவ அதிகாரிகள் சங்கத்தைச் சேர்ந்த மருத்துவர் ஹரித அளுத்கே கூறினார்.

இந்த நேர்மறை வீதமானது ஒரு மாதத்துக்கு முன் 3.0 மட்டத்தில் இருந்தது. பின்பு 4ஆம் மட்டத்துக்கு அதிகரித்தது. இப்போது 5ஆம் மட்டத்தைக் கடந்து 5.5 அளவில் உள்ளது. இது அதிக அபாயமான நிலையாகும் என அவர் கூறினார்.

எவ்வாறாயினும் வைரஸ் இன்னும் சமூகத்திலிருந்து வெளியாகவில்லை என்றும் குணமடைந்த அனைத்து நோயாளர்களும் மினுவாங்கொடை மற்றும் பேலியகொட கொத்தணிகளுடன் தொடர்புடையோராவர் என்றும் தொற்று நோயியல் பிரிவு கூறுகிறது.

ஆனால் அண்மைய தொற்றுக்கள் மேற்படி இரு கொத்தணிகளுடனும் தொடர்பற்றவை என்றும் அவர் கூறினார்.

துரதிர்ஷ்டவசமாக மேல் மாகாணத்திலிருந்து பிற மாகாணங்களுக்கு வைரஸ் பரவலைத் தடுக்க நாடு தவறி விட்டது. எனவே இப்போது நாட்டின் பல்வேறு பகுதிகளில் அதிகமான உப கொத்தணிகள் உருவாகத் தொடங்கியுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

அண்மையில் நாட்டின் பிற மாகாணங்களில் குறிப்பாக தெற்கு, மத்திய மாகாணங்களில் மிகப் பெரும் எண்ணிக்கையில் 100க்கு மேலான தொற்றாளர்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர்.



தொற்றுநோயியல் பிரிவு என்னதான் கூறினாலும் கொவிட்-19 வைரஸ் சமூகப் பரவலாகியுள்ளதுடன் அது அடிமட்ட ஆய்வுகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது எனவும் இதனால் நாடு ஆபத்தான கட்டத்தை நோக்கிச் செல்கின்றது எனவும் மருத்துவர் ஹரித அளுத்கே கூறினார்.

# கொழும்பு கிழக்கு முனையத்துக்கான நன்றியே இலவச கொரோனா தடுப்பூசி!

## சாடுகிறார் பத்தரமுல்லை சீலரத்ன தேரர்



**கொழும்பு, ஜன.26**

**கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தைப் பெற்றுக்கொள்வதற்கு ஈடாகவே, எமது நாட்டிற்கு கொரோனா தடுப்பு மருந்தை இலவசமாக வழங்குவதற்கு இந்தியா முன்வந்திருக்கிறது என்று பத்தரமுல்லை சீலரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.**

இந்தியாவில் அதானி நிறுவனத்திற்கு எதிராக விவசாயிகள் பாரியளவிலான போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்தியப் பிரதமர் மோடியும் மக்களின் குரலுக்கு செவி சாய்த்து அந்த நிறுவனத்தைப் புறக்கணிப்பார். அத்தகைய ஒருவருக்கு எமது துறைமுகத்தின் 49 சதவீத உரிமையை ஏன் வழங்கவேண்டும் என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடு கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

இந்த நாட்டின் சொத்துக்கள், துறைமுகங்கள் தொடர்பில் நாம் இப்போது கவலையடைந்திருக்கின்றோம். நாம் கடந்த காலத்திலும், தற்போதும் எமது தாய்நாட்டைப் பாதுக்கப்பட வேண்டும் என்றே தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்திருக்கின்றோம். நாட்டின் சொத்துக்களை விற்பனை செய்வதை உடனடியாக நிறுத்துமாறு கடந்த அரசாங்கத்திடம் வலியுறுத்தினோம்.

தற்போது எமது நாட்டுக்கு கொரோனா வைரஸ் தடுப்பு மருந்தை இலவசமாக வழங்குவதற்கு இந்தியா தயாராக இருக்கின்றது. இந்தத் தடுப்பு மருந்தை எமக்கு இலவசமாகப் பெற்றுத்தருவதற்கு என்ன காரணம்? ஏனைய நாடுகள் தடுப்புமருந்தைப் பணம் செலுத்தியே கொள்வனவு செய்ய வேண்டியுள்ளது.

எனவே அரசாங்கத்திற்கு அதானி நிறுவனத்திற்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் கொழும்புத்துறைமுகத்தின் கிழக்கு முனையத்திற்குப் பதிலாகவே கொரோனா வைரஸ் தடுப்புமருந்து எமக்கு இலவசமாக வழங்கப்படுகின்றது.

கொழும்புத்துறைமுகத்தின் கிழக்கு முனையத்தின் உரிமையில் 51 சதவீதம் இலங்கைக்கும் 49 சதவீதம் இந்தியாவிற்கும் வழங்கப்படும் என்று ஜனாதிபதி கோட்டாபய அறிவித்திருக்கிறார். ஆனால் உண்மையில் அதுபோன்று 51 சதவீதம் எமது நாட்டிற்குக் கிடைக்காது. எனவே கிழக்கு முனையத்தின் நூறு சதவீத உரிமையையும் எம்வசமே இருக்கவேண்டும்.

இந்தியாவில் அதானி நிறுவனத்திற்கு எதிராக விவசாயிகள் பாரியளவிலான போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்தியப்பிரதமர் மோடியும் மக்களின் குரலுக்கு செவி சாய்த்து அந்த நிறுவனத்தைப் புறக்கணிப்பார். அத்தகைய ஒருவருக்கு எமது துறைமுகத்தின் 49 சதவீத உரிமையை வழங்குவதன் ஊடாக, இங்கு பெரு நிறுவனங்கள் ஸ்தாபிக்கப்படும்.

அதன் விளைவாக இலங்கையைச் சேர்ந்தவர்களுக்கு தொழில்வாய்ப்புக்கள் இல்லாமல்போகும். இதன் விளைவுகள் இவ்வாறிருக்கையில், அரசாங்கத்தினால் ஏன் நாட்டின் வளங்களைப் பாதுகாக்க முடியாது? மக்கள் வீதிகளில் இறங்கிப் போராடும் விதமாக செயற்படுவதை அரசாங்கம் நிறுத்திக்கொள்ள வேண்டும்.

அதேபோன்று அண்மைக் காலத்தில் சமூகவலைத் தளங்களின் ஊடாக பிரதமர் மஹிந்த தொடர்பில் பல்வேறு போலிப் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அவருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருப்பதாகவும் கூறுகின்றனர். அவையனைத்தும் பொய்யான செய்திகளாகும்.

நான் இன்று சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் வரை அவருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டேன். அவருக்கு எந்தவொரு வைரஸ் தொற்றும் ஏற்படவில்லை. அவர் மிகுந்த ஆரோக்கியத்துடன் இருக்கின்றார்-என்றார்.

# விஜேசிறி, ஹேஷ விதானகே தனிமைப்படுத்தப்பட்டனர்

கொழும்பு, ஜன. 26

பாராளுமன்ற உறுப்பினர்களான சமிந்த விஜேசிறி மற்றும் ஹேஷ விதானகே ஆகியோர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வசந்த யாப்பா பண்டாரவுக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதனை அடுத்து அவருடன் நெருங்கிய தொடர்புடைய இந்த இரு பாராளுமன்ற உறுப்பினர்களும் சுயதனிமைப்படுத்தப்பட் டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1341 கிலோ கிராம் மஞ்சள் மீட்பு

கொழும்பு, ஜன. 26

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட 1, 341 கிலோ கிராம் மஞ்சள் தொகையுடன் சந்தேக நபர் ஒருவர்கைது செய்யப்பட்டுள்ளார்.

சிலாவத்துறை கடற்படையினரால் வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்நிலையில், இந்தச் சம்பவத்தில் 19 வயதான சிலாவத்துறை பகுதியைச் சேர்ந்த நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

# யாழில் அபிவிருத்திகளை முன்னெடுக்க எம்.பிக்களிடம் முன்மொழிவுகள் கோரல்

யாழ்ப்பாணம், ஜன. 26

2021 வரவு-செலவுத் திட்டத்தில் யாழ்ப்பாணம் மாவட்டநிதியில் ஒதுக்கப்பட்ட நிதியில் முன்னெடுக்கப்படவேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்களிடம் முன்மொழிவுகள் கோரப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட செயலர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில்-

2021ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் 10 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் முன்னெடுக்கப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்களுக்கான முன்மொழிவுகள் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கோரப்பட்டுள்ளன.

அபிவிருத்தித் திட்டங்கள் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் ஊடாக மார்ச் மாதம் தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

இதனால், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ள நிலையில், அதற்கமைய அவர்கள் தமது முன்மொழிகளைச் சமர்ப்பிக்க முடியும்-என்றார்.

# சிறைகளில் தொற்று உறுதியான 151 பேர் தொடர்ந்து சிகிச்சையில்

கொழும்பு, ஜன. 26

கொரோனா தொற்று உறுதியாகிய சிறைச்சாலைகளுடன் தொடர்புடைய 151 பேர் தற்போது தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருவதாக சிறைச்சாலை கள்திணைக்களம்தெரிவித்துள்ளது.

அவர்களில் 146 பேர் கைதிகள் என்றும் ஐந்து பேர் சிறைச்சாலைகள் அதிகாரிகள் என்றும் சிறைச்சாலைகள் திணைக்களம் கூறியுள்ளது.

சிறைச்சாலைகளுக்குள் இதுவரை கொரோனா தொற்று உறுதியாகியவர்களின் மொத்த எண்ணிக்கை 4,396 ஆக உள்ளது. அவர்களில் 4,234 பேர் குணமடைந்துள்ளனர் எனவும் சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

# வவுனியா ஒருங்கிணைப்புக் குழு அலுவலகத்தில் நேற்று கைகலப்பு

வவுனியா, ஜன. 26

வவுனியா ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இருவருக்கிடையில் கைகலப்பு ஏற்பட்டுள்ளது.

நேற்றுக் காலை ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் வன்னி பாராளுமன்ற உறுப்பினருமான கு. திலீபனின் அலுவலகத்தில் மக்கள் அதிகமாக இருந்தபோதே இருவருக்கிடையில் கைகலப்பு ஏற்பட்டுள்ளது.

கைகலப்பில் ஈடுபட்ட இருவரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியை சேர்ந்தவர்கள் எனத் தெரிய வருகின்றது.

# புதையல் தோண்டிய 14 பேர் பொலிஸாரால் நேற்று கைது

கொழும்பு, ஜன. 26

சட்டவிரோதமாக புதையல் தோண்டிய 14 பேரை, கொஸ்லாந்தை பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

கொஸ்லாந்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரட்ணசிறி பண்டாரவுக்கு கிடைக்கப்பெற்ற தகவலொன்றையடுத்து, ஸ்தலத்திற்கு விரைந்த பொலிஸார், தும்மல்ஹோர என்ற இடத்தில் புதையல் தோண்டிக்கொண்டிருந்த 14 பேரையும் கைது செய்தனர்.

அத்துடன், புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட பெருமளவிலான உபகரணங்களையும், பொலிஸார் கைப்பற்றினர். கைது செய்யப்பட்ட 14பேரும், ஊவா-மாவெலகமைச் சேர்ந்த ஒக்பீல்ட் பெருந்தோட்டத்தைச் சேர்ந்தவர்களாவார். இவர்கள் விசாரணையின் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவாரென்று, கொஸ்லாந்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரட்ணசிறி பண்டார தெரிவித்தார்.

அருந்ததி
இணைய திருமண சேவை

| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
| --- | --- |
| 15892 \|வே\|1975<br>Seperated\|கொழும்பு-06\| இந்து<br>It Engineer\|Sri lanka\|<br>செவ் : 02 \|மகம்(சிம்மம்)\|177செ.மீ | 16042\| செ\|1977<br>Divorced\|கண்டி\| இந்து<br>Nurse\| Sri lanka\|சூ.செவ் : 02<br>பூராடம்(தனுசு) \| 168செ.மீ |
| 15883\|மு \|1976<br>Divorced\| மஸ்கெலியா\| இந்து<br>Coordinator \| Qatar\|<br>பூசம்கடகம்)\|171செ.மீ | 16117\| வே \|1978<br>பருத்தித்துறை\|இந்து \|Sri Lanka\|<br>பூரம்(சிம்மம்)\|161செ.மீ |
| 16000\| வே\|1979<br>வல்வெட்டித்துறை\| இந்து\|Uk\|<br>Business\|பூசம்(கடகம்) \|170செ.மீ | 16135\| வே \|1979<br>நல்லூர்\| இந்து \|செவ் : 02<br>Computer Typist\| Sri lanka\|<br>கார்த்திகை(மேடம்) \|158செ.மீ |
| 15934 \|வே \|1980<br>யாழ்நகரம்\| இந்து \|செவ் : 12<br>Mechanical\|Sri lanka\|<br>சதயம்(கும்பம்)\|171செ.மீ | 15877\| வே\|1981<br>ஏளாலை\|Sri Lanka\|சூ.செவ் : 09<br>Insurance Agent \| இந்து<br>மகம் (சிம்மம்)\| 168செ.மீ |
| 15757\| வே \|1981<br>யாழ்நகரம்\| இந்து \| செவ் : 04<br>Mechanical\| UK<br>கேட்டை(விருச்சிகம்)\| 158செ.மீ | 16033\| வே \|1981<br>சாவகச்சேரி\| இந்து \| செவ் : 07<br>Grama Sevaka\|Sri lanka\|<br>பூசம்(கடகம்) \|155செ.மீ |

20, கே.கே.எஸ் வீதி கொக்குவில் யாழ்ப்பாணம்
0777 164 524 www.arunthathee.com



# வவுனியா நகரில் நேற்று பல பகுதிகள் விடுவிப்பு

வவுனியா, ஜன. 26

வவுனியாவில் கொரோனா தொற்று அதிகரித்த நிலையில் தனிமைப்படுத்தப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்ட வவுனியா நகர் நேற்று திங்கள்கிழமை விடுவிக்கப்பட்டது.

வவுனியா பட்டாணிச்சூரை சேர்ந்த கர்ப்பிணிப் பெண் மற்றும் பல்கலைக்கழக மாணவர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை தொடர்ந்து அந்தக் கிராமம் முடக்கப்பட்டது.

அத்தோடு வவுனியா நகரப்பகுதியில் தொற்றாளர்கள் அதிகரித்து வந்த நிலையில் பிரதான நகரம் உட்பட்ட 19 கிராம சேவையாளர்கள் பிரிவுகளில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டு முடக்கப்பட்ட நிலையில் கடந்த 18ஆம் திகதி வவுனியா நகர மத்தி தவிர்ந்த ஏனைய பகுதிகள் விடுவிக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் நேற்று மில் வீதி தவிர்ந்த ஏனைய பகுதிகள் முற்றாக விடுவிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, தனிமைப்படுத்தப்பட்ட வியாபார நிலையங்கள் மூடப்பட்டுள்ளதுடன், வவுனியா மொத்த வியாபார நிலையமும் மூடப்பட்டுள்ளது.

அத்தோடு வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் அன்ரிஜென் அல்லது பி.சி.ஆர் பரிசோதனை செய்யப்படாத பெருமளவு வர்த்தக நிலையங்கள் சுகாதாரப் பரிசோதகர்களால் மூடப்பட்டுள்ளதுடன் பரிசோதனை மேற்கொண்டவர்கள் மட்டுமே வர்த்தக நிலையங்களைத் திறந்து வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட அனுமதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மார்ச் மாதத்திலேயே தடுப்பூசி வந்து சேரும்

## ராஜித சேனாரத்ன கூறுகிறார்



கொழும்பு,ஜன.26

**அடுத்த சில வாரங்களில் இலங்கைக்கு கொரோனா வைரஸ் தடுப்பு மருந்து கிடைக்கலாம் என தெரிவிக்கப் படுவதை நிராகரித்துள்ள முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன, மார்ச் மாதமளவிலேயே இலங்கைக்கு கொரோனா வைரஸ் தடுப்பு மருந்து கிடைக்கலாம் எனவும் தெரிவித்தார்.**

சனத்தொகையில் 15 சதவீதமான வர்களுக்கே மருந்து கிடைக்கும் எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஒருவருக்கு இரண்டு டோஸ்களை வழங்கவேண்டும் என்பதால் 600,000 மருந்துகள் மூன்று இலட்சம் பேருக்கு போதுமானதாகவிருக்கும். உலக சுகாதார ஸ்தாபனத்திடமிருந்து கிடைக்கும் மருந்துகளை சனத்தொகையின் 20 வீதமான மக்களுக்கே வழங்க முடியும். ஒருவருக்கு இரண்டு டோஸ்கள் வழங்கப்படவேண்டும் என்பதால் மார்ச்சில் 15 வீதமானவர்களுக்கே மருந்து கிடைக்கும்.

இலங்கை மக்கள் அனைவருக்கும் கொரோனா வைரஸ் மருந்து கிடைப்பதற்கு இன்னமும் இரண்டரை வருடங்களாகும்.

இலங்கை ஏனைய நாடுகளைப் போல முன்கூட்டியே மருந்துகளுக்கு வேண்டுகோள் விடுக்கத் தவறியதன் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

322 பில்லியன் சனத்தொகையை கொண்ட அமெரிக்கா ஏற்கனவே மருந்துகளுக்கு முன்பதிவு செய்துள்ளது. 37 பில்லியன் சனத்தொகையை கொண்ட கனடா 38 மில்லியன் மருந்திற்கு பதிவு செய்துள்ளது. இந்தியா 1800 மில்லியன் மருந்தினை பெறுவதற்கு முன்பதிவு செய்துள்ளது.

இலங்கை முன்கூட்டியே பதிவு செய்ய தவறியுள்ளதால் மிகக் குறைந்த அளவிலான மருந்துகளே கிடைக்கவுள்ளன.

கொரோனா வைரஸ் மருந்துகளுக்கு முன்பதிவு செய்யாத அரசாங்கம் உள்ளூர் மருந்துகளை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளில் இறங்கியது. ஆற்றில் பானைகளை வீசுவதிலும் பாணிகளை குடிப்பதிலும் ஈடுபட்ட அமைச்சர் கொரோனா நோயாளியாகியுள்ளார்-என்றார்.

# அரசியல் கைதிகளை பயன்படுத்தி ஜெனிவாவைச் சமாளிக்க முயற்சி!

கொழும்பு, ஜன. 26

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் எதிர்ப்பை குறைப்பதற்காக, அரசியல் கைதிகள் விவகாரத்தை பயன்படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் குறித்து அரசாங்கம் உடனடியாக ஆராயவுள்ளதாகவும், இது குறித்து ஆராய்ந்து பரிந்துரைகளை முன்வைக்குமாறு சட்டமாஅதிபர் திணைக்களம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

ஏனைய பல நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என வெளிவிவகார அமைச்சர் வார இதழ் ஒன்றிற்கு தெரிவித்துள்ளார் . எனினும் மேலதிக விவரங்களை அவர் வெளியிடவில்லை.





# ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தை தேசியப் பாடசாலையாக மாற்றுங்கள்

## மக்கள் திரண்டு நேற்றுப் போராட்டம்

முல்லைத்தீவு, ஜன. 26

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தைத் தேசிய பாடசாலையாக மாற்ற கோரி பெற்றோர் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம் அண்மையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப்பட்ட பாடசாலைகளின் பெயர் பட்டியலுக்குள் உள்வாங்கப்படவில்லை என தெரிவித்து குறித்த கவனவீர்ப்புப் போராட்டம் பெற்றோர்களால் முன்னெடுக்கப்பட்டது.

தமது பாடசாலையைத் தேசிய பாடசாலை திட்டத்துக்குள் உள்வாங்குவதற்கான சகல தகுதிகள் இருந்தபோதும் அண்மையில் வெளியிடப்பட்டுள்ள தேசிய பாடசாலைப் பட்டியலில் அது உள்வாங்கப்படவில்லை என தெரிவித்த பெற்றோர், இது எவ்வாறு இடம்பெற்றது என்பது தொடர்பான தெளிவுபடுத்தலை தமக்கு வழங்கவேண்டும் எனக் கோரியே போராட்டத்தில் ஈடுபட்டனர். அண்மையில் மாவட்ட அரசாங்க அதிபர், வலயக்கல்விப் பணிப்பாளர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடன் கலந்துரையாடியபோது எமது பாடசாலை தெரிவு செய்யப்பட்டிருப்பதாக தெரிவித்தபோதும் தற்போது அது அந்தப் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டது எவ்வாறு, அல்லது ஏன் தெரிவு செய்யப்படவில்லை என போராட்டத்தில் ஈடுபட்டோர் கேள்வி எழுப்பினர்.

இது குறித்து கருத்து வெளியிட்ட பாடசாலை அதிபர், தன்னால் உரிய தரவுகள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பான மேலதிக தகவல்கள் தனக்கு தெரியாது என்றும் தெரிவித்தார்.

போராட்டத்தில் ஈடுபட்ட பெற்றோர்கள், அங்கு வலயக் கல்வி பணிப்பாளர் வருகை தந்து இதற்கான பதிலை வழங்கவேண்டும் என கோரினர்.

போராட்டம் இடம்பெறுவதாக தெரிவிக்கப்பட்ட நிலையில் காலை 7 மணிக்கு முன்னதாகவே பாடசாலையின் இரண்டு வாயிலுக்கும் முன்பாக பொலிஸார் குவிக்கப்பட்டு பாடசாலை வளாகத்திற்குள் பெற்றோர்கள் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டது.

# முல்லைத்தீவு வித்தியானந்தா மைதானத்தில் எறிகணைகள்!

முல்லைத்தீவு, ஜன. 26

தேசியப் பாடசாலையான முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரியின் மைதான புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டபோது போர் காலத்தில் புதைக்கப்பட்ட எறிகணைகள் மீட்கப்பட்டுள்ளன.

எறிகணைகளை இனம்கண்ட வேலையாட்கள் முள்ளியவளை பொலிஸ் நிலைத்திற்கு தகவல் வழங்கினர். அங்கு வந்த படையினர் வெடிபொருள் தொடர்பான ஆய்வினை மேற்கொண்டனர்.

நீதிமன்ற உத்தரவிற்கு அமைய அந்த வெடிபொருட்களை அகற்ற நடவடிக்கை எடுக்கவுள்ளதாக முள்ளியவளை பொலிஸார் தெரிவித்தனர்.

# விமானப்படைத் தளபதியை தூதராக ஏற்க மறுக்கும் கனடா?

கொழும்பு,ஜன.26

**இலங்கை தூதுவராக நியமித்தவரை ஏற்றுக்கொள்வதை கனடா தாமதப்படுத்தி வருகிறது. கனடாவுக்கான இலங்கையின் புதிய தூதுவராக முன்னாள் விமானப்படை தளபதி எயர்சீவ் மார்சல் சுமங்கல டயஸ் நியமிக்கப்பட்டார்.**

அவரது நியமனத்திற்கு பாராளுமன்றத்தின் உயர்பதவிக்களுக்கான குழு கடந்த வருடம் நவம்பர் மாதம் ஒன்பதாம் திகதி அனுமதி வழங்கியிருந்தது. எனினும் அவரது நியமனத்தை அங்கீகரிப்பதை கனடா தாமதப்படுத்துகின்றது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கைக்கு எதிரான தீர்மானத்திற்கு பிரதான அனுசரணை வழங்கிய நாடுகளில் ஒன்று கனடா என்பதையும் இலங்கையில் பாதுகாப்புதுறை சீர்திருத்தங்களைமுன்னெடுக்கவேண்டும் என கனடா குரல்கொடுத்து வருவதையும் இலங்கையின் வெளிவிவகார அமைச்சு கவனிக்கத் தவறிவிட்டது என ஆங்கில வார இதழ் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் கனடாவின் பல நகரங்களில் புலம்பெயர் தமிழர்களின் செல்வாக்கு உள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ள ஆங்கில வார இதழ் இந்த நியமனம் இலங்கையின் நலன்களுக்கு உகந்தது இல்லை நியமிக்கப்பட்டவரின் நலன்களுக்கும் உகந்தது இல்லை என தெரிவித்துள்ளது.






## கன்னாட்டி அ.த.க. பாடசாலையை விரைவில் திறப்பதற்கு நடவடிக்கை

வவுனியா, ஜன. 26

நீண்ட நாட்களாக மூடப்பட்டுள்ள கன்னாட்டி அ.த.க.பாடசாலை விரைவில் திறக்க வன்னி பாராளுமன்ற உறுப்பினரும் வவுனியா ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான கு. திலீபன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இது தொடர்பாக கல்வி திணைக்கள அதிகாரிகளுடன் கலந்துரையாடி முடிவு எடுக்கப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் கூறினார்.

அந்தக் கிராம மக்களின் பிரச்னைகள் தொடர்பாக நேரில் ஆராய சென்றபோதே மக்கள் குறித்த விடயம் தொடர்பில் தெரிவித்ததை அடுத்தே நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஜனவரியிலும் தீர்வு கிட்டவில்லை; இழுபறியில் கூட்டு ஒப்பந்த பேச்சு

கொழும்பு, ஜன. 26

2021 ஜனவரி முதல் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச நாளாந்த வேதனமாக ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என அரசாங்கம் அறிவித்திருந்தாலும் அந்த உறுதிமொழி இன்னும் நிறைவேற்றப்படவில்லை. கூட்டு ஒப்பந்த பேச்சு இழுபறி மட்டத்திலேயே இருக்கின்றது.

பெருந்தோட்டக் கம்பனிகளுக்கும், முதலாளிமார் சம்மேளனத்துக்குமிடையில் தொழில் அமைச்சரின் தலைமையில் இதுவரை 6 சுற்று பேச்சுகள் நடைபெற்றிருந்தாலும் அவை தோல்வியிலேயே முடிவடைந்துள்ளன.

அடிப்படை நாட் சம்பளமாக ஆயிரம் ரூபா வேண்டும் என்பதே தொழிலாளர்களின் கோரிக்கையாகும். எனினும், அனைத்து கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய வகையில் சூழ்ச்சிகரமான சம்பள சூத்திரத்தை கம்பனிகள் முன்வைத்துள்ளன. இதனை தொழிற்சங்கங்கள் ஏற்கவில்லை. அத்துடன், அடிப்படை சம்பளம் ஆயிரம் என்ற கோரிக்கையையும் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் பிரதான தொழிற்சங்கம் கைவிட்டுள்ளது.

ஜனவரி மாதம் முடிவடைவதற்குள் தீர்வு காணப்படக்கூடிய சாத்தியம் இல்லை. எனவே, சம்பளப் பிரச்னை பெப்ரவரி மாதத்துக்குள்ளும் நுழைகின்றது.

## சிறுமியை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய சிறுவன் கைது!

கொழும்பு, ஜன. 26

03 வயது சிறுமியை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் 14 வயதுச் சிறுவனொருவன் மினுவாங்கொடை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். சிறுவன் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

குறித்த சிறுமியின் தாய் மற்றும் தந்தை தொழில் நிமித்தம் வெளியில் செல்வதால் பாட்டியின் பாதுகாப்பிலேயே அவர் இருந்துள்ளார்.

விளையாடிவிட்டு வருவதாகக் கூறி குறித்த சிறுமியை சந்தேக நபரான சிறுவன் தனது வீட்டுக்கு அழைத்துச் சென்றுள்ளார். இச்சந்தர்ப்பத்திலேயே சிறுமி துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி சிறுமி கம்பஹா மாவட்ட தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதோடு கைது செய்யப்பட்ட சிறுவன் மினுவாங்கொடை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார்.

## 195 இலங்கையர் நாடு திரும்பினர்

கொழும்பு, ஜன. 26

கொரோனா பரவல் காரணமாக வெளிநாடுகளில் சிக்கியிருந்த மேலும் 195 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

நேற்றுக் காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களில் 8 விமான சேவைகள் மூலம் இவர்கள் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். இவர்களில் 75 பேர் சவூதி அரேபியாவிலிருந்து வருகை தந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இளைஞர் குழு ஞாயிறு இரவு மன்னாரில் பெரும் அடாவடி!

### பாதுகாப்பு கோரி நீதவான் வாசஸ்தலத்திற்கு முன்பாக தஞ்சமடைந்தனர் மக்கள்

மன்னார், ஜன. 26

மன்னார்- சாவக்கட்டு கிராமத்திற்குள் நுழைந்த இளைஞர் குழுவொன்று அங்குள்ள வீடுகளில் புகுந்து தாக்குதல் நடத்தியமையினால், தங்களுக்கு பாதுகாப்பு வழங்குமாறு கோரி அந்தப் பிரதேச மக்கள், நீதவான் வாசஸ்தலத்துக்கு முன் தஞ்சமடைந்த சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு சாவக்கட்டு கிராமத்துக்குள் நுழைந்த இளைஞர் குழுவொன்று அங்குள்ள வீடுகளினுள் அத்துமீறி நுழைந்து ஆண்கள், பெண்கள் மற்றும் வயோதிபர்கள் என அனைவர் மீதும் தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச்சென்றுள்ளது.

இதனையடுத்து அந்த கிராம மக்கள் தமக்கு பாதுகாப்பு வழங்கக் கோரி நேற்று முன் தினம் இரவு 8 மணியளவில் மன்னார் மாவட்ட நீதவானின் வாசஸ்தலத்திற்கு முன் ஒன்றுகூடி, போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

சாவக்கட்டு கிராமத்திற்குள் நேற்று முன் தினம் இரவு சுமார் 10 இற்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிளில் முக்கவசம் மற்றும் தலைக்கவசம் அணிந்து, கூரிய ஆயுதங்களுடன் சென்ற இளைஞர் குழு, அந்தக் கிராமத்திலுள்ள வீடுகளுக்குள் சென்று அனைவர் மீதும் சரமாரியாக தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்த தாக்குதல் சம்பவத்தில் பெண் உட்பட இருவர் காயமடைந்த நிலையில் மன்னார்மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தினால் அச்சமடைந்த கிராம மக்கள், ஒன்று சேர்ந்து நேற்று முன் தினம் இரவு 8 மணியளவில், மன்னார் மாவட்ட நீதவானின் வாசஸ்தலத்திற்கு முன் ஒன்றுகூடி, போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

தமக்கு உரிய பாதுகாப்பை வழங்குமாறும் குறித்த நபர்களைக் கைது செய்யுமாறும் கோரிக்கை அவர்கள் விடுத்தனர். இதனால் இந்த வீதியூடான போக்குவரத்து சிறிது நேரம் பாதிக்கப்பட்டது.

இதன்போது சம்பவ இடத்திற்கு வந்த மன்னார் பொலிஸார், மக்களுடன் பேச்சு மேற்கொண்டு மன்னார் பொலிஸ் நிலையத்திற்கு சென்று முறைப்பாட்டைப் பதிவு செய்யுமாறு கோரினர். இந்நிலையில் அந்த மக்கள் மன்னார் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று முறைப்பாட்டை மேற்கொண்டனர்.

அண்மையில் இளைஞர் குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலை தொடர்ந்து பொலிஸார் சிலரை கைது செய்து பிணையில் விடுவித்திருந்தனர். இந்த நிலையிலே குறித்த இளைஞர் குழு, நேற்றுமுன்தினம் இரவு சாவட்கட்டு கிராமத்திற்குள் சென்று தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக தெரிய வருகின்றது.





# சாதிக்க முயற்சியா சதி நாடகமா ?

தமிழ் மக்களின் ஐக்கியம் என்பது வரவேற்கத்தக்கது. அதுவே இன்றைய தேவையும். ஆனால் தற்போதைய இந்த மூவேந்தர் ஒற்றுமை என்பது தமிழ் மக்கள் மத்தியில் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

"வெண்ணை திரண்டு வரும்போது தாழி உடைந்தது" போன்ற நிலைக்கு மீண்டும் தமிழ் மக்கள் தள்ளப்பட்டு விடுவார்களோ என்ற ஐயத்தை ஏற்படுத்தியுள்ளது. பல சந்தர்ப்பங்களில் போர் குற்ற விசாரணை முடிவடைந்து விட்டது என்ற கருத்துக்களை முன் வைத்து வந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், இப்போது ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இருந்து மீண்டும் செயலாளர் நாயகத்துக்கு திருப்பி அனுப்புமாறு கோரியுள்ளதாகக் கூறுகின்றார். இவ்வாறான முடிவு மீண்டும் காலத்தை இழுத்தடிப்பு செய்வதற்கான புதிய யுக்தியாகக்கூட இருக்கலாம் என்ற சந்தேகம் எழாமல் இல்லை.

அதேபோன்று இறுதியாக நடந்த நேர்காணலில்கூட நாம் சர்வதேசத்தில் இருந்து எந்த ஒரு தீர்வையும் எதிர்பார்க்க முடியாது என்ற கருத்தையே சுமந்திரன் முன்வைத்துள்ளார். ஆனால், இதற்கு முற்றும் மாறாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சர்வதேசத்திடம் இருந்தே தீர்வை பெற்றுக்கொள்ள முடியும் என்ற கருத்தை முன்வைக்கின்றார். இரண்டு மாறுபட்ட கருத்துடையவர்கள் இணைந்து கொள்கிறார்கள் என்றால் அங்கே ஏதோ ஒரு திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாகவே தெரிகின்றது. அது மக்களுக்கு நன்மையாக இருந்தால் நாமும் வரவேற்றுக் கொள்ளலாம்.

ஆனால், இங்கே அவ்வாறான நன்மைகள் நிகழும் சாத்தியங்கள் அரிதாகவே தெரிகின்றபோது, நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியம் பேசுகின்ற சக்திகளின் வாக்குச் சரிவையையும், அரச சார்பு அபிவிருத்தி அரசியல் சக்திகளின் எழுச்சியையும் கட்டுப்படுத்தவே இவ்வாறான போலி நாடகம் அரங்கேற்றப்பட்டுள்ளதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

அதேபோன்று இந்தியா தமிழர் நலன்களில் அக்கறையாக இருக்கின்றது என்று சுமந்திரனே ஏற்றுக்கொள்ளும் போது, இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை அமுல்படுத்த இந்தியாவுக்கு அழுத்தம் கொடுப்பதற்கு பதிலாக சர்வதேச விசாரணை என்று இந்தியாவைச் சிக்கலில் சிக்கவைத்து தமிழர்கள் மீது இந்தியாவை வெறுப்பு அடைய வைப்பதற்கான நடவடிக்கையாகவும் இது இருக்கலாம் என்றும் எண்ணத் தோன்றுகிறது.

ஒட்டு மொத்தத்தில் 1976 இல் அடுத்த பாராளுமன்றத் தேர்தல் தமிழ் ஈழத்தில் என்று எப்படி மக்களை உசுப்பேற்றி தமிழரசுக் கட்சி வாக்குகளைக் கொள்ளையடித்ததோ அதேபோன்று 44 வருடங்களின் பின்பு தங்களுக்கு ஏற்பட்டுள்ள வாக்கு வங்கிச் சரிவை ஈடுகட்டவே நாங்கள் ஒற்றுமையாகச் செயல்பட தொடங்கியுள்ளோம் என்ற மாயையை போலித் தமிழ்த் தேசியவாதிகள் கையில் எடுத்து நாடகம் ஆட முயற்சி செய்கிறார்கள் என்பதே உண்மை.

**-ஷாம் வரதன், லண்டன்.**

---



# இந்திய- சீன எல்லையில் மீண்டும் வெடித்த மோதல்

இந்தியா மற்றும் சீனாவுக்கு இடையிலான சர்ச்சைக்குரிய எல்லைப்பகுதியில் மீண்டும் இருநாட்டு இராணுவ வீரர்கள் மோதலில் ஈடுபட்டதாகவும், இதில் இரண்டு தரப்பிலும் வீரர்களுக்கு காயங்கள் ஏற்பட்டதாகவும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சிக்கிம் மாநிலத்தின் வடக்குப் பகுதியிலுள்ள எல்லைப்பகுதியில் மூன்று நாட்களுக்கு முன்னர் இந்த மோதல் ஏற்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இருநாட்டு இராணுவ வீரர்களுக்கிடையே மற்றொரு சர்ச்சைக்குரிய எல்லைப் பகுதியில் கடந்த ஆண்டு நடைபெற்ற மோதலை அடுத்து இந்தியா மற்றும் சீனாவுக்கிடையேயான உறவில் பதற்றம் நீடித்து வரும் நிலையில் இந்த செய்தி வெளிவந்துள்ளது.

கடந்த ஆண்டு லடாக்கின் கல்வான் பள்ளத்தாக்கத்தில் இருநாட்டு இராணுவ வீரர்களுக்கிடையே ஏற்பட்ட கைகலப்பில் குறைந்தது 20 இந்திய இராணுவ வீரர்கள் உயிரிழந்தனர். எனினும், தங்களது தரப்பில் ஏற்பட்ட உயிரிழப்பு குறித்து சீன இராணுவம் கருத்து ஏதும் தெரிவிக்கவில்லை.

இந்த நிலையில், மூன்று நாட்களுக்கு முன்னர் சிக்கிமில் உள்ள நாகு லா கணவாய் என்ற இடத்தில் இருநாட்டு இராணுவ வீரர்களுக்கிடையே மோதல் ஏற்பட்டதாக இந்திய இராணுவ அதிகாரிகளை மேற்கோள் காட்டி இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஒரு சீன ரோந்து படை இந்திய எல்லைக்குள் நுழைய முயன்றபோது, அவர்கள் வலுக்கட்டாயமாக திருப்பி அனுப்பப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இதுதொடர்பாக சீன தரப்பிலிருந்து இதுவரை கருத்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

### இந்திய இராணுவம் விளக்கம்

இந்த நிலையில் இதுதொடர்பாக விளக்கம் அளித்துள்ள இந்திய ராணுவம், இருநாட்டு இராணுவ வீரர்களுக்கிடையே மோதல் ஏற்பட்டதை உறுதிசெய்துள்ளது.

"கடந்த ஜனவரி 20ஆம் திகதியன்று சிக்கிமின் வடக்குப் பகுதியிலுள்ள நகுலா என்ற பகுதியில் சிறிய அளவில் இருநாட்டு வீரர்களுக்கிடையே மோதல் ஏற்பட்டது. பின்னர் இது இருநாடுகளிடையே ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் படி, உள்ளூரிலுள்ள இராணுவ அதிகாரிகளால் தீர்த்து வைக்கப்பட்டது. எனவே, உண்மைக்கு புறம்பான தகவல்களையோ அல்லது மிகைப்படுத்த செய்திகளையே வெளியிடுவதை ஊடகங்கள் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்" என்று இந்திய இராணுவத்தின் தரப்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### சர்ச்சைக்குரிய இந்திய - சீன எல்லை

இந்தியா, சீனாவுடன் 3,488 கி.மீ எல்லையைப் பகிர்ந்து கொள்கிறது. இது மெய்யான கட்டுப்பாட்டுக் கோடு (Line of Actual Control - LAC) எனப்படுகிறது.

ஜம்மு-காஷ்மீர், இமாச்சலப் பிரதேசம், உத்தராகண்ட், சிக்கிம் மற்றும் அருணாச்சல பிரதேசம் ஆகியவற்றை ஒட்டி இந்த எல்லை செல்கிறது.

மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ள இந்த எல்லையின் மேற்குப் பகுதியில் ஜம்மு-காஷ்மீர், மத்திய பகுதியில் இமாச்சலப் பிரதேசம் மற்றும் உத்தராகண்ட் மற்றும் கிழக்குப் பகுதியில் சிக்கிம் மற்றும் அருணாச்சல பிரதேசம் இடம் பெற்றுள்ளன.

இரண்டு நாடுகளுக்கிடையே ஒரேயொருமுறை கடந்த 1962 இல் போர் ஏற்பட்டது, அதில் இந்தியா தோல்வியுற்றது.





# கிராமங்களின் ஓசை வாசனைகளுக்கு இனிமேல் சட்டப் பாதுகாப்பு!



## பிரான்ஸில் வருகிறது புதிய சட்டம்

கா.குமாரதாஸ்
பாரிஸ்

“சேவல் சத்தமாய் கூவுவதால் என் தூக்கம் கலைகிறது”, “பலத்த கூச்சல் போடும் குளத்துத் தவளைகளால் என் நிம்மதி தொலைகிறது” , “வீட்டுக்குப் பக்கத்தில் சாணம் மணக்கிறது”.. “கூரையில் புறாக்கள் புறுபுறுக்கின்றன..”

“வீதி வளைவில் கழுதை கனைக்கிறது...”

“ வயலில் சூடடிக்கும் சத்தம் என் ஜன்னலில் கேட்கிறது... “.. கோவில் மணி ஓசை கிட்டவாய் ஒலிக்கிறது..”

-இப்படியெல்லாம் அயலோடு குற்றம் குறைபட்டுக் கொண்டு யாரும் இனிமேல் நீதிமன்றங்களை நாடமுடியாது.

கிராமங்களில் இது சகஜம். இந்த உணர்வுப் பாரம்பரியத்தோடு சேர்ந்து வாழுங்கள்...

இவ்வாறு நகரங்களில் இருந்து வருவோருக்குப் புத்தி சொல்கிறது புதிய பிரெஞ்சுச் சட்டம்.

கிராமச் சூழல்கள் சார்ந்த உணர்வு களுக்கென்று தனியான பாரம்பரியம் இருக்கிறது. நகரமயமாகி வருகின்ற உலகில் கிராம உணர்வுப் பாரம்பரியங்களைத் தக்க வைப்பதற்குப் பெரும் போராட்டங்களை நடத்தவேண்டி இருக்கிறது. பிரெஞ்சுக் கிராமத்தவர்களின் அத்தகைய நீண்ட காலப் போராட்டங்களுக்கு இப்போது பலன் கிடைத்துள்ளது.

பிரான்ஸின் கிராமங்களில் அவற்றின் உணர்வுப் பாரம்பரியமான சில விடயங்களுக்குச் சட்டப் பாதுகாப்பை வழங்கும் பிரேரணை ஒன்று நாடாளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேறி உள்ளது.

பிரெஞ்சு மொழியில் ‘La loi visant à protéger le patrimoine sensoriel des campagnes’ என்று பெயரிடப்பட்ட அந்தச் சட்டம் கிராமங்களின் வாசனைகள், ஒலிகள், விவசாய நடவடிக்கைகளுக்குச் சட்டரீதியான பாதுகாப்பை வழங்கும்.

மாடுகள், மந்தைகளின் சத்தம்.. சேவல் கொக்கரிப்பு,கழுதைகளின் வாசனை, மணி ஓசை, மரம் அரியும் ஆலையின் சத்தம், இரவில் செய்யும் விவசாய நடவடிக்கைகளின் ஒலிகள், சாணத்தின் மணம்.. தவளைகளின் ஒப்பாரி.. குதிரைகளின் குளம்பு ஒலி.. இப்படிப் பலவிதமான கிராமங்களின் உணர்ச்சிப் பாரம்பரியங்களை இனிமேல் யாரும் சட்டச் சிக்கலுக்கு இழுக்க முடியாது.

தனிமையையும் வெறுமையையும் பெருக்கும் நகர வாழ்வை விட்டு வெளியேறிக் கிராமப் புறங்களில் சொத்துக்களை வாங்கிக் கொண்டு குடியேறுவோர் அங்கு கிராமங்களின் தனி இயல்புகளுடன் அடிக்கடி முரண்படுகின்றனர்.

நகர வாழ்வின் நெரிசல் மிகுந்த குடியிருப்புகளில் இரவு பத்து மணிக்குமேல் யாரும் அயலவருக்கு இடையூறாகச் சத்தம் எழுப்புவதை சட்டங்கள் தடுக்கின்றன. நீண்டகாலம் நகர வாழ்க்கைக்குப் பழக்கப்பட்டு விட்டவர்கள் கிராமங்களுக்குச் சென்று வாழ்க்கையைத் தொடங்கும் போது அங்கு சூழலில் இயல்பாக உள்ள இயற்கையான ஓசைகள், ஒலிகளை தங்களுக்கு இடைஞ்சலாக உணர்கின்றனர். அடுத்த வீடுகளுடன் அயல் சண்டைகள் வெடித்து விவகாரங்கள் நீதிமன்றம் வரை செல்கின்றன.

பக்கத்து வீட்டு சேவல் தினமும் காலையில் பலத்த சத்தமாய் கூவித் தனது தூக்கத்தைக் கெடுப்பதாகக் குற்றஞ்சாட்டி அயலவர் ஒருவர் தொடர்ந்த வழக்கு நாடளாவிய கவனத்தை ஈர்த்தது. ‘மொறிஸ்’ என்ற பெயர் கொண்ட அந்தச் சேவல் நீதிமன்றம் வரை சென்று வழக்கில் வென்று உலகப் பிரபலம் பெற்றது.

“மாடுகள், மந்தைகளின் சத்தம்.. சேவல் கொக்க ரிப்பு,கழுதைகளின் வாசனை, மணி ஓசை, மரம் அரியும் ஆலையின் சத்தம், இரவில் செய்யும் விவ சாய நடவடிக் கைகளின் ஒலிகள், சாணத்தின் மணம்.. தவளை களின் ஒப்பாரி.. குதிரைகளின் குளம்பு ஒலி.. இப்படிப் பலவிதமான கிராமங்களின் உணர்ச் சிப் பாரம்பரியங்களை இனிமேல் யாரும் சட்டச் சிக்கலுக்கு இழுக்க முடியாது.”

பிரான்ஸின் கிராமங்களில் இருந்து இதுபோன்ற அயல் சண்டை வழக்குகள் பற்றிய செய்திகள் தினமும் வருகின்றன.

கிராமம் ஒன்றுக்கு நகரில் இருந்து வந்த உல்லாசப் பயணிகள் தாங்கள் தங்கியிருந்த இடத் துக்குப் பக்கத்தில் தெருக்களில் சாணம் கிடப்பதைக்கண்டு முறையிட்டனர். இன்னுமொரு சம்பவத்தில் சிறிய தேவாலயம் ஒன்றின் மணி தினமும் காலையில் ஏழு மணிக்கு ஒலிப்பதை ஆட்சேபித்து அந்த நேரத்தை மாற்றுமாறு கேட்டனர். உள்ளூர் நிர்வாகத்தின் தலைவர் அதற்குச் செவிசாய்க்க மறுத்துவிட்டார்.


உள்ளூராட்சி சபைத் தலைவர் ஒருவர் வீதிகளில் “வளைவு வருகிறது கவனம்” என்று எச்சரிக்கை அறிவிப்புப் பலகை வைப்பதுபோல் “கிராமம் வருகிறது கவனம்” எனப் பயணிகளை எச்சரிக்கும் பாணியில் அறிவிப்புப் பலகை ஒன்றை தனது கிராமத்தின் நுழைவாயிலில் பொருத்தி சர்ச்சையைக் கிளப்பினார்.

குதிரைகள், கழுதைகளின் லாயங்களில் இருந்து கெட்ட மணம் வீசுவதாக முகம் சுழிப்போருக்குப் பதிலடி கொடுப்பதற்காகவே அந்த உள்ளூர் மக்களின் பிரதிநிதி அப்படிச் செய்தார்.

கிராமங்களில் அவற்றின் தனித்துவங்களைக் கேள்விக்கு உள்ளாக்குகின்ற இத்தகைய முரண்பாடுகளுக்குத் தீர்வு காணவும் கிராமங்களின் சூழல் சார்ந்த உணர்வுப் பாரம்பரியங்களைப் பேணிப் பாதுகாக்கின்ற நோக்குடனுமே புதிய சட்டத்தைப் பிரான்ஸின் நாடாளுமன்றம் நிறைவேற்றி உள்ளது.

அந்தந்தக் கிராமங்கள் தத்தமது பகுதியின் உணர்வுப் பாரம்பரியமான ஒலிகள், வாசனைகளைப் பட்டியலிட்டுத் தயாரித்துப் பதிவேடு ஒன்றைப் பேணி அவற்றைப் பாதுகாப்பதற்குப் புதிய சட்டம் அனுமதிக்கிறது.

கிராமங்களில் வீட்டையோ வளவையோ வாங்கிக் கொண்டு குடியேற வருகின்ற நகர வாசிகள் சொத்துக்களை வாங்குவதற்கு முன்பாக அங்கு காணப்படுகின்ற அயல் அம்சங்களை ஏற்றுக் கொள்ள வேண்டிய கடப்பாடு டையவர்களாக இருப்பதை இச் சட்டம் உறுதிப்படுத்துகிறது.



# வசந்த யாப்பா பண்டார எம்.பிக்கும் கொரோனா



கொழும்பு,ஜன.26

கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வசந்த யாப்பா பண்டாரவுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அண்மையில் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜெயசேகர மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் ஆகியோருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதனையடுத்து பாராளுமன்ற உறுப்பினர்கள் 31 பேரும், பணியாளர்கள் பலரும் தனிமைப்படுத் தப்பட்டிருந்தனர்.

அதனைத் தொடர்ந்து பாராளுமன்றில் சகலருக்கும் பி.சி.ஆர்.பரிசோதனைகளை முன்னெடுக்க வேண்டும் என சபாநாயகர் வலியுறுத்தியிருந்தார்.

அதற்கமைய பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பணியாள்களுக்கு பி.சி.ஆர்.பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதில் பாராளுமன்றில் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடும் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் உள்ளிட்ட ஐவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

மேலும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐவருக்கு இது வரை கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்த நிலையில் தற்போது பாராளுமன்ற உறுப்பினர் வசந்த யாப்பா பண்டாரவுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான பாராளுமன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 6 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றுக்குள்ளான அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மற்றும் முன்னாள் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகியோர் பூரண குணமடைந்து சிகிச்சை நிலையத்திலிருந்து வெளியேறியுள்ளனர். (எ)

# ஐ.நா. ஆணையாளரின் அறிக்கைக்கு இலங்கை அரசாங்கம் நாளை பதில்

## நட்பு நாடுகளிடம் ஆதரவு கோரத் தீர்மானம்



கொழும்பு,ஜன.26

**ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணையாளர் மிசெல் பச்லெட்டின் அறிக்கை தொடர்பில் இலங்கை அரசாங்கம் தனது பதிலை நாளை புதன்கிழமை பகிரங்கப்படுத்தும் என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.**

இலங்கை தொடர்பில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு பரிந்துரை செய்துள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர், யுத்தக்குற்றங்கள் தொடர்பில் ஆதாரங்களைப் பெறுவதற்கான சர்வதேச பொறிமுறையொன்று குறித்தும் பரிந்துரை செய்துள்ளார்.

அத்துடன் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டனர் என நம்பகத்தன்மை மிக்க விதத்தில் குற்றச்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக பயணத்தடைகள் விதிக்கப்படலாம் எனவும் அவர்களின் சொத்துக்கள் முடக்கப்படலாம் என்றும் ஆணையாளர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என ஜயனத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

என்றபோதும் ஆதாரங்கள் எவையும் நிரூபிக்கப்படாதவர்களுக்கு எதிராகவே இந்தக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்தத் தருணத்தில் அவசியமற்ற சில விடயங்கள் ஐ.நா. ஆணையாளரின் அறிக்கையில் காணப்படுகின்றன. அவதூறு கற்பிக்கமுனையும் நாடுகள் சிலவற்றை விட இலங்கையர்களான நாம் அமைதியாகவும், ஸ்திரத்தன்மை மிக்கவர்களாகவும் காணப்படுகின்றோம்.

அத்துடன் முன்னைய அறிக்கைகளை விட இந்த அறிக்கை மோசமானது. இலங்கையில் ஆபத்தான போக்கு தென்படுகின்றது.

இதேவேளை, நீதிப்பொறி, வெளிநாட்டு நீதிபதிகள் ஆகிய விடயங்களைத் தவிர ஐக்கிய நாடுகள் சபைக்கு வழங்கிய உறுதிமொழியில் காணப்படும் அனைத்தையும் இலங்கை நிறைவேற்றிவிட்டது.

இந்நிலையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கைக்கான தனது பதிலை இலங்கை அரசாங்கம் நாளை புதன்கிழமை சமர்ப்பிக்கும்.

மேலும் இலங்கைக்கு எதிராக மற்றுமொரு தீர்மானத்தைக் கொண்டுவருவதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன என்ற தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில் இலங்கைக்கு ஆதரவளிக்கும் நட்புநாடுகளையும் ஒத்த நிலைப்பாடுகளைக் கொண்ட நாடுகளையும் கேட்டுக்கொள்ளும் நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன. அத்துடன் புதிய தீர்மானத்துக்கு ஆதரவு வழங்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டதாகவும், ஆனால், புதிய தீர்மானம் கிடைப்பதற்கு காத்திருக்கின்றோம் எனவும்

# ஐ.நா. பிரேரணையிலிருந்து வெளியேறின் பாரிய நெருக்கடியைச் சந்திக்க நேரிடும்

## அரசாங்கத்தை எச்சரிக்கிறார் கிரியெல்ல

கொழும்பு,ஜன.26

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆராயவும், உள்ளக ரீதியில் தீர்வுகளை எட்ட நல்லாட்சி அரசாங்கம் ஆரோக்கியமான வேலைத்திட்டங்களை முன்னெடுத்தது. 2015 ஆம் ஆண்டு அமெரிக்கா கொண்டுவந்த பிரேரணைக்கு இலங்கை இணை அனுசரணை வழங்கியமை இதன் ஆரோக்கியமான முன்னகர்வு என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

ராஜபக்ஷ அரசாங்கம் ஐ.நா. பிரேரணையிலிருந்து வெளியேறினால் இலங்கை பாரிய நெருக்கடியைச் சந்திக்க நேரிடும் எனவும் அது பொருளாதாரத் தடைவரையில் இலங்கையைக் கொண்டு செல்லும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆராயவும், ஜெனிவா நெருக்கடிகளைச் சமாளிக்கவும் ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை அமைத்துள்ள நிலையில் அதன் நோக்கம் தொடர்பிலும், இலங்கை மீதான ஜெனிவா நெருக்கடிகள் தொடர்பிலும் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

யுத்தக் குற்றங்கள் இடம்பெற்றதாகத் தொடர்ந்து குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இதில் இராணுவம் ஒட்டுமொத்தமாக இராணுவக் குற்றங்களைச் செய்ததாக நாமும் கூறவில்லை. ஆனால் தனிப்பட்ட ரீதியில் இராணுவத்தில் ஒரு சிலர் குற்றங்களைச் செய்துள்ளனர். அதற்கான ஆதாரங்கள், நீதிமன்ற விசாரணைகள், சாட்சியங்கள் எனப் பல உள்ளன.

இவ்வாறான நிலையில் ஜெனிவாவில் கொண்டுவரப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணையை ஏற்றுக்கொள்வதாகவும், உள்ளக ரீதியில் இதற்கான விசாரணைகளை நடத்தி நீதியை நிலைநாட்டுவதாகவும் அப்போதைய மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் சர்வதேசத்துக்கு வாக்குறுதிகளை வழங்கியுள்ளது. அந்த வாக்குறுதிகளின் பிரகாரமே தொடர்ந்து மனித உரிமைகள் பேரவையில் பிரேரணைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

நல்லாட்சி அரசாங்கம் புதிதாக பிரேரணையைக் கொண்டுவந்து இலங்கை இராணுவத்தை போர்க் குற்றங்களில் சிக்கவைக்கவில்லை. போர்க் குற்றங்களில் சிக்கவிருந்த இராணுவத்தையும், அதற்குத் துணை நின்ற தலைவர்களையும் எமது அரசாங்கத்தில் எடுத்த நடவடிக்கைகள் காரணமாக காப்பாற்றியுள்ளோம். 2015 ஆம் ஆண்டு அமெரிக்கா கொண்டுவந்த பிரேரணையை நாம் நிராகரிக்காது இணை அனுசரணை வழங்கியதன் மூலமாகவே இலங்கைக்கான சர்வதேச ஒத்துழைப்புக்கள் கிடைக்கப்பெற்றன.

இலங்கைக்குள் தமிழர்களைத் திருப்திப்படுத்தும் வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடிந்தது. ஐரோப்பிய நாடுகள் பல எமக்கான உதவிகளை செய்யவும், ஒத்துழைப்புக்களை வழங்கவும் தீர்மானம் எடுத்தன. அவற்றின் மூலமாக இலங்கை சர்வதேசத்துடன் நெருக்கத்தை உருவாக்கியது.

ஆனால் ராஜபக்ஷவினரின் அரசாங்கம் மீண்டும் ஆட்சிக்கு வந்ததும் அவர்களில் பழைய தவறுகளை செய்யத் தயாராகிவிட்டனர். 2015 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட பிரேரணையில் இருந்து அரசாங்கம் விலகிக்கொள்வதாக கூறியுள்ள நிலையில் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஏனைய ஐரோப்பிய நாடுகள் அதற்கான எதிர்ப்பை வெளிப்படுத்த ஆரம்பித்து விட்டனர்.

இந்த நிலைமை தொடருமாயின் இலங்கை தனித்துவிடப்படுவதுடன், ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார தடைகளுக்கும் உள்ளாக நேரிடும். வெறுமனே சீனாவை மாத்திரம் நம்பிக்கொண்டு அரசாங்கம் எடுக்கும் முயற்சிகள் இலங்கையை மிகப்பெரிய நெருக்கடிக்குள் தள்ளப்போகின்றது.

இப்போதும் கூட சீனாவின் ஆதரவு கிடைக்கும் என்ற நம்பிக்கையிலேயே அரசாங்கம் ஜெனிவா விவகாரங்களை நிராகரிக்கத் தீர்மானம் எடுத்துள்ளது. அதேபோன்று அரசாங்கம் தற்போது அமைத்துள்ள ஆணைக்குழு இலங்கைக்கு எந்த விதத்திலும் கைகொடுக்கப்போவதில்லை, இது வெறுமனே கண்துடைப்பு நாடகம் என்பதை சர்வதேசம் நன்கறியும் என்றார். (எ)

# கட்டுநாயக்கா விமான நிலைய 11 பணியாளர்களுக்கு தொற்று

கொழும்பு,ஜன.26

கட்டுநாயக்கா பண்டாரநாயக்க சர்வசே விமான நிலையத்தில் பணிபுரியும் 11 பாதுகாப்புப் பணியாளர்கள் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என விமான நிலையங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து துறைத் தலைவர் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்தார்.

இந்நிலையில் சுகாதார அதிகாரிகளின் மேற்பார்வையின் கீழ் தங்களது வீடுகளைத் தனிமைப்படுத்திக் கொள்ளுமாறும் பாதுகாப்பு அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் பாதுகாப்புப் படையினருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த விமான நிலைய அதிகாரிகளின் மற்றொரு குழு பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. (எ)



# இலங்கைக்கு எதிரான முயற்சி ஐ.நாவில் தோற்கடிப்படும்

## அமைச்சர் சரத் வீரசேகர உறுதி



கொழும்பு,ஜன.26

**ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கூட்டத் தொடரில் இம்முறை இலங்கையை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் புலம் பெயர் தமிழர் அமைப்புக்களும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் முன்னெடுத்துள்ள முயற்சிகள் அனைத்தும் தோற்கடிக்கப்படும். உள்ளகப் பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்கு சர்வதேச அரங்கில் முயற்சிப்பது பயனற்றது என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் கூட்டத்தொடர் தொடர்பில் வினவிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது கூட்டத்தொடர் தீர்மானமிக்கது. கடந்த காலங்களில் இலங்கைக்கு எதிராகப் புலம் பெயர் தமிழ் அமைப்புக்கள், சர்வதேச நாடுகள் ஆகியவை ஒன்றிணைந்து பல பிரேரணைகளை கொண்டு வந்தன.

இவற்றில்30 ;1 பிரேரணையை பிரதானமாக கருத வேண்டும். இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட்ட பிரேரணைக்கு நல்லாட்சி அரசாங்கம் இணை அனுசரனை வழங்கியமை தேசதுரோக செயலாகும்.

இறுதிக்கட்ட யுத்தத்தில் மனித உரிமை மீறல்கள் இடம் பெற்றதாக சர்வதேச அரங்கில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டினை நல்லாட்சி அரசாங்கம் நியாயப்படுத்தியது.

இராணுவத்தினரைத் தண்டிக்கும் செயல்பாடுகளை நல்லாட்சி அரசாங்கம் முன்னெடுத்தது. அரசியல் நோக்கங்களுக்காகவும், புலம்பெயர் அமைப்புக்களை திருப்திப்படுத்துவதற்காகவும் உயர்மட்ட இராணுவ அதிகாரிகள் கைது செய்யப்பட்டனர்.

சர்வதேச அரங்கில் இலங்கையைப் பாதுகாக்க நல்லாட்சி அரசாங்கம் முறையான நடவடிக்கைகளை 2015 தொடக்கம் 2019 வரையான காலப் பகுதியில் முன்னெடுக்கவில்லை.

அரச சார்பற்ற நிறுவனமாகச் செயல்பட்டு இலங்கையைப் பாதுகாக்கும் செயல்பாடுகளைத் தொடர்ந்து முன்னெடுத்தோம். 2019ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்படுவதற்கு இதுவும் ஒரு காரணியாக இருந்தது.

இம்முறை மனித உரிமை பேரவை கூட்டத்தொடரில் இலங்கையை நெருக்கடிக்குள்ளாக்க புலம்பெயர் தமிழர் அமைப்புக்களும், முன்னெடுத்துள்ள திட்டங்கள் தோற்கடிக்கப்படும். இதுவரையில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்து ஆராய விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது உள்ளக பிரச்னைக்கு சர்வதேச அரங்கில்தீர்வு காண்பது சாத்தியமற்ற செயல்பாடாகும்.

சர்வதேச அரங்கில் இலங்கைக்கு எதிராக செயற்படுபவர்கள் தமிழ் மக்களின் முன்னேற்றம் குறித்து எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை இலங்கையை குற்றஞ்சாட்டி ஒரு தரப்பினர் சர்வதேசத்தில் தஞ்சமடைந்துள்ளார்கள்.

இது அவர்களின் தனிப்பட்ட விருப்பமாகும் சுய நலதேவைக்கான ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் பயன்படுத்திக் கொள்வது முறையற்ற செயல்பாடாகும்.

தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்று குறிப்பிட்டுக் கொள்ளும் தமிழ் அரசியல் கட்சிகள் யுத்த காலத்தில் தமிழ் மக்களைப் பாதுகாக்கவில்லை.

இவர்கள் கொழும்பில் சுகபோக வாழ்க்கையினை அக்காலத்தில் வாழ்ந்தார்கள். 30 வருட காலயுத்தம் தமிழ் மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படவில்லை.

பயங்கரவாதத்தில் இருந்து நாட்டை மீட்டெடுக்கும் தேவை அரசாங்கத்திற்கு இருந்தது. யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் சுமார் 12 ஆயிரத்துக்கும் அதிகமான போராளிகளுக்கு புனர்வாழ்வளிக்கப்பட்டு அவர்களுக்கு சிறந்த எதிர்காலம் வழங்கப்பட்டது .உலகில் வேறெந்த நாடுகளும் இவ்வாறு செய்படவில்லை. யுத்தம் நிறைவடைந்த பின்னர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் துரிதமாக அபிவிருத்தி செய்யப்பட்டன. தமிழ் மக்களுக்கு மாகாண சபை தேர்தல் ஊடாக அரசியல் உரிமை வழங்கப்பட்டது.

தமிழ் மக்களின் உரிமைகளை பறிக்க வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு கிடையாது. அனைத்து இன மக்களின் உரிமைகளையும் பாதுகாக்கும் பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு- என்றார். (எ)



## ஊழலற்ற அதிகாரிகள் தேர்வில் யாழ். பிரதேச செயலருக்கு விருது

கொழும்பு,ஜன.26

2020 ஆம் ஆண்டில் இலங்கையில் ஊழலற்ற அதிகாரிகள் தேர்வில் யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் சாம்பசிவம் சுதர்ஷன், ஐவரில் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டு விருது பெற்றுள்ளார்.

ட்ரான்ஸ்பரன்ஸி இன்டர்நஷனல் ஸ்ரீலங்கா நிறுவனத்தால் ஊழலற்ற நிர்வாகத்துக்கான குறுஞ்செய்தி அனுப்பும் வாக்கெடுப்பில் யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் எஸ்.சுதர்ஷன், பொதுமக்களின் ஆதரவுடன் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

இந்தத் தேர்தல் கடந்த 22ஆம் திகதி முடிவடைந்த நிலையில் அவருக்கு பெருமளவில் வாக்குகள் குவிந்தன.

இதனையடுத்து இலங்கையின் ஊழலற்ற அதிகாரியாகத் தெரிவு செய்யப்பட்டு நேற்று பிரதேச செயலாளர் எஸ்.சுதர்ஷனுக்கு விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

இந்த விருதை முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய வழங்கினார். (எ)

## இராணுவத்துக்கு ஆட்சேர்ப்பு ஆரம்பம்

கொழும்பு,ஜன.26

நாடளாவிய ரீதியில் உள்ள சகல பாதுகாப்பு படைத் தலைமையகங்களுக்கும், பிரதேச செயலக மட்டத்திலிருந்து ஆட்சேர்ப்பு செய்யும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி ஜனவரி - மார்ச் மாதம் வரையில் இந்த ஆட்சேர்ப்பு திட்டம் முன்னெடுக்கப்பட உள்ளதுடன் வர்த்தக மற்றும் பொதுச்சேவைப் பிரிவுகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்பவே மேற்படித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பிரிவுகளில் இணைந்துக்கொள்ள விரும்பும் தேக ஆரோக்கியமான ஆற்றல் மிக்க இளைஞர் பாதுகாப்பு படைத்தலைமையகங்களுடன் தொடர்புகொள்ள முடியும்.

மேலும் ஆட்சேர்ப்பு பணியகத்தால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வன்னி, மத்திய, கிழக்குப் பகுதிகளில் உள்ள பாதுகாப்பு படைத் தலைமையக மட்டங்களில் 2020, 22-31ஆம் திகதிகளில் ஆட்சேர்ப்புப் பணிகளுக்கான தொடர் விழிப்புணர்வுத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதுடன் மேற்படி ஒவ்வொரு பாதுகாப்பு படைத் தலைமையகங்களில் பிரிகேட் படைப் பிரிவு தளபதியின் தலைமையில் பிரிகேடியர் பொது பதவி நிலை அதிகாரியின் மேற்பார்வையின் கீழ் இந்த பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதன்பிரகாரம், பாதுகாப்பு பதவி நிலை பிரதானியும், இராணுவத் தளபதியுமான ஜெனரல் ஷவேந்திர சில்வாவின் வழிகாட்டலின் கீழ், இராணுவ ஆட்சேர்ப்பு பிரிவின் பணிப்பாளர் பிரிகேடியர் ஏ.ஏ.டி.என். எஸ்.பி. துனுவில மற்றும் ஆட்சேர்ப்பு பிரிவின் பதவி நிலை அதிகாரி - 1 லெப்டினன் கேணல் எம்.எல்.டி.மொல்லிகொட ஆகியோரின் தலைமையில் ஆட்சேர்ப்பு பணிகள் இடம் பெற உள்ள நிலையில் ஒவ்வொரு கிராமத்தில் இருந்தும் குறைந்த பட்சம் மூன்று இளைஞர்கள் இராணுவத்திற்கு இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

எனவே இராணுவத்தில் இணைந்துகொள்ள விரும்புவோர் அருகிலுள்ள பாதுகாப்பு படைத் தலைமையகத்தினை தொடர்பு கொண்டு வயதெல்லை,கல்வித் தகைமை என்பவற்றை தெரியப்படுத்தி, சம்பள விவரம், சலுகைக் கொடுப்பனவுகள் மருத்துவ சலுகைகள் உள்ளிட்ட விடயங்கள் பற்றி அறிந்துகொள்ள முடியும்.

அல்லது அருகிலுள்ள இராணுவ படைப் பிரிவிற்கு நேரடியாக சென்று அங்கு ஆட்சேர்ப்புக்கு பொறுப்பாக இருக்கும் அதிகாரிகளை சந்தித்து மேலதிக தகவல்களை அறிந்துகொள்ளவும் முடியும்.

தொடர்புகளுக்கு:

யாழ்ப்பாணம் - 011 4056102, 076 5303715, வன்னி (வவுனியா) - 0766907293,கிழக்கு (வெலிகந்த) - 027 2259128, 076 6907297, கிளிநொச்சி - 076 4514395, 070 1918333, முல்லைத்தீவு - 071 2138268, மேற்கு (பனாகொடை) - 076 5303721, மத்திய (தியதலாவை) - 076 6907304, 0765303719, பணிப்பாளர் - ஆட்சேர்ப்பு பிரிவு(கொஹூவலை) - 011 2815080, 011 3137 553 எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## இலங்கை கடற்படையின் உதவியுடன் மீட்கப்பட்டது எம்.வி. யுரோசன் கப்பல்

திருகோணஅலை,ஜன.26

அபுதாபியிலிருந்து திருகோணமலை துறைமுகம் நோக்கிப் பயணித்த லைபீரியா நாட்டுக் கப்பலான எம்.வி. யுரோசன், திருகோணமலை துறைமுகத்திலிருந்து சுமார் 10 கடல் மைல் தொலைவில் உள்ள சின்ன இராவணா கோட்டைக் கடற்பரப்பில் பாறையொன்றில் மோதிய நிலையில் சிக்குண்டிருந்த நிலையில் இலங்கைக் கடற்படையினரின் உதவியுடன் மீட்கப்பட்டது.

கப்பலில் சீமெந்து உற்பத்திக்குப் பயன்படுத்தும் கிளிங்கர் திரவம் 33 ஆயிரம் தொன்னும், 720 மெட்ரிக் தொன் டீசலும் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன என முதல்கட்ட ஆய்வுகளில் கண்டறியப்பட்டிருந்தது.

மேற்கு ஆபிரிக்க நாடான லைபீரியா நாட்டுக் கொடியின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள எம்.வி. யுரோசன் சரக்குக்கப்பல்



கடந்த ஜனவரி 8 ஆம் திகதி அபுதாபியிலிருந்து சீமெந்துக்கான திரவப் பொருள்கள் மற்றும் கட்டுமானப் பொருள்களுடன் திருகோணமலை துறைமுகத்தை நோக்கிப் பயணமாகிய நிலையிலேயே சின்ன இராவணா கோட்டை கடற்பரப்பில் ஆழமற்ற நீரோட்டத்தில் பயணித்த நிலையில் சுண்ணாம்புப் பாறைகளில் மோதியதுடன் கப்பலின் கீழ்த்தளம் பாறை ஒன்றில் சிக்குண்டு நகர முடியாத நிலையில் காணப்பட்டது.

எனினும் நேற்று முன்தினம் பிற்பகல் வேளையில் இலங்கைக் கடற்படையினர் கப்பலை மீட்டு அந்த இடத்தை விட்டு நகர்த்தியுள்ளனர். (எ)

## தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 2600 பேருக்கு எதிராக வழக்கு

கொழும்பு,ஜன.26

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட 2600 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்றுக் காலை 9 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலயங்களுக்குள் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முகக்கவசம் அணியாமை, சமூக இடைவெளியைக் கடைப்பிடிக்கமை தொடர்பில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் இது வரையில் 2,746 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். - என்றார். (எ)



# தாய்வான் எல்லைக்குள் சீன போர் விமானங்கள்!

## பதற்ற நிலை உச்சத்தை அடைந்தது

தாய்பேய், ஜன. 26

தாய்வானை அச்சுறுத்தும் வகையில் சீனாவின் போர் விமானங்கள் மற்றும் போர்க் கப்பல்கள் கடந்த இரண்டு நாட்களாக தாய்வான் எல்லைகளை முற்றுகையிட்டதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் பதவிக் காலத்தின் பின்னர் இடம்பெற்ற இந்த நடவடிக்கை தாய்வானுக்கான பைடனின் ஆதரவை பரிசோதிக்கும் ஒரு நடவடிக்கையாக அமைந்திருக்கலாம் என ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற சீனாவின் போர்ப் பயிற்சியை ஒத்த நடவடிக்கையில் 12 போர் விமானங்கள் பங்கேற்றன.

தாய்வான் தனது நாட்டின் ஒரு பகுதி என சீனா தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறது. ஆனால் தாங்கள் இறைமை கொண்ட தன்னாட்சி நாடு என தாய்வான் கூறி வருகிறது.

சமீபத்திய மாதங்களில் தாய்வானின் தெற்குப் பகுதிக்கும், தென் சீனக் கடலில் உள்ள தாய்வானின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதாஸ் தீவுகளுக்கும் இடையில் சீன போர் விமானங்கள் மற்றும் போர்க் கப்பல்கள் பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன.

ஆனால் இவ்வாறான நடவடிக்கைகளில் வழக்கமாக ஒன்று முதல் மூன்று உளவு விமானங்கள், நீர்மூழ்கி கப்பல்கள், போர் விமானங்கள் ஈடுபடுவது வழமையாக உள்ளதாக தாய்வான் தெரிவித்துள்ளது.

ஆனால் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நடவடிக்கையில் 12 போர் விமானங்கள் பங்கேற்றன. இவை தாய்வான் வான்பரப்புக்குள் நுழைந்து வெளியேறின. அத்துடன், இரண்டு நீர்மூழ்கி எதிர்ப்பு விமானங்கள் மற்றும் ஒரு உளவு விமானம் ஆகியவையும் இந்த நடவடிக்கையில் பங்கேற்று தாய்வான் கடல் எல்லை வரை வந்து சென்றன என தாய்வான் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

சீன விமானங்கள் தாய்வான் எல்லைக்குள் நுழைந்தபோது தாய்வான் விமானப்படை இது குறித்து எச்சரிக்கை விடுத்தது. அத்துடன், சீன விமானங்களை கண்காணிக்க வான் பாதுகாப்பு ஏவுகணை அமைப்புகளையும் தாய்வான் நிறுத்தியது.

அமெரிக்க ஜனாதிபதியாக ஜோ பைடன் பதவியேற்ற சில நாட்களில் இடம்பெற்ற சீனாவின் இந்த நடவடிக்கை அமெரிக்காவின் தாய்வானுடனான உறவை சோதிக்கும் ஒரு நடவடிக்கை என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

# பிரான்ஸில் மூன்றாவது முடக்கம்!

## எலிஸேயில் வரும் புதனன்று கூட்டத்துக்குப் பின் முடிவு

பாரிஸ், ஜன. 26

தற்போது அமுலில் உள்ள இரவு ஊரடங்கின் தாக்கங்களை மதிப்பீடு செய்து அடுத்த கட்டத் தீர்மானத்தை எடுக்கின்ற முக்கிய கூட்டம் எலிஸே மாளிகையில் நாளை புதனன்று நடைபெறவுள்ளது.

பெரும்பாலும் மூன்றாவது பொது முடக்கம் ஒன்றை அறிவிப்பதற்கான முன் ஆலோசனைகள் அந்தக் கூட்டத்தில் இடம்பெறும் என்று ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

மூன்றாவது தேசிய பொது முடக்கக் கட்டுப்பாடுகளை அதிபர் இம்மானுவல் மக்ரோன் நாளை புதன் கிழமை நாட்டு மக்களுக்குத் தொலைக்காட்சி வாயிலாக அறிவிக்கக் கூடும் என்று அரசின் மூத்த அமைச்சர் ஒருவரை ஆதாரம் காட்டி ஞாயிறு பத்திரிகையான "Journal Du Dimanche" இன்று தகவல் வெளியிட்டிருக்கிறது. பாடசாலைகள் தொடர்ந்து இயங்குவதை அனுமதித்தவாறு வேறுபல இறுக்கமான கட்டுப்பாடுகளைக் கொண்டதாக மூன்றாவது பொது முடக்கம் இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் நாட்டு மக்களுக்கான அதிபரின் அடுத்த உரை எப்போது என்பது இந்தக் கட்டத்தில் இன்னமும் தீர்மானிக்கப் படவில்லை என்று எலிஸே வட்டாரங்கள் கூறியுள்ளன.

'மாறுபாடடைந்த வைரஸ் வகைகளின் தீவிர பரவலை எதிர்கொள்வதற்காக மற்றொரு தேசியப் பொது முடக்கம் அவசியமாகின்றது. அதற்கான தீர்மானத்தை எடுப்பதற்கான நாட்கள் நெருங்கி விட்டன. வழமை போன்று அதிபர் அதனை தொலைக் காட்சியில் தோன்றி அறிவிக்க வேண்டும். அது பெரும்பாலும் அடுத்த புதன்கிழமையாக இருக்கும். அடுத்த வார இறுதியில் இருந்து மூன்று வாரங்களுக்கு நீடிக்கத் தக்கதாக அந்தக் கட்டுப்பாடுகள் அமையும்' என்று மூத்த அமைச்சர் ஒருவர் குறிப்பிட்டார்.

-இவ்வாறு ஞாயிறு பத்திரிகையின் முன் பக்கச் செய்தியில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

தற்சமயம் மாலை ஆறு மணிமுதல் நடைமுறையில் இருந்துவருகின்ற ஊரடங்கு விதிகள் வைரஸ் பரவலில் ஏற்படுத்தக் கூடிய தாக்கங்களைப் பொறுத்து முக்கிய தீர்மானங்கள் அடுத்தவாரம் எடுக்கப்படும் என்று சுகாதார அமைச்சர் ஒலிவியே வேரன் கடந்த வாரம் குறிப்பிட்டிருந்தார்.



# 'நானும் தமிழன்தான்'

## ராகுல்காந்தி அதிரடி பேச்சு!

நான் தமிழகத்தில் பிறக்கவில்லையே தவிர, நானும் ஒரு தமிழன் தான் என அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி எம்.பி. தெரிவித்துள்ளார்.

நேற்று 2ஆவது நாளாக திருப்பூர் மாவட்டம் ஊத்துக்குளி, காங்கேயத்தில் அவர் பிரசாரம் செய்தார்.

அப்போது அவர் பேசியதாவது: -

நான் உங்களுக்கு அறிவுரை சொல்வதற்காக இங்கு வரவில்லை. உங்களை சந்தித்து உங்களுடைய குறைகளை தெரிந்து அவற்றை நிவர்த்தி செய்வதற்காக என்னை நான் அர்ப்பணிக்க வந்துள்ளேன்.

இந்தியாவில் உள்ள மற்ற மாநிலத்தில் இருக்கிறவர்கள் தமிழ்நாட்டை பார்த்து கற்றுக்கொள்ள வேண்டும். தமிழ் மொழிக்கு இருக்கும் பெருமையும், பண்பாட்டின் சிறப்பையும் அவர்கள் பார்த்து தெரிந்து கொள்ள வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

நான் தமிழகத்தில் பிறக்கவில்லையே தவிர, நானும் ஒரு தமிழன் தான். மோடி தமிழ் மக்களுக்கு அநீதி இழைத்து விட்டு அவர் வெற்றிகரமாக செல்ல முடியாது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். நான் உங்கள் வீட்டுப் பிள்ளை என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டில் இயற்கை வளங்கள் அதிகமாக இருக்கின்றன. வாய்ப்பு வசதிகள் அதிகம் உள்ளன. ஆனால் தமிழக மக்களாகிய நீங்கள் இன்னும் வாழ்க்கையில் வளம் பெறாமல் இருக்கிறீர்கள் என்பதைப் பார்க்கும்போது எனக்கு வருத்தமாக உள்ளது.

தமிழக மக்களுக்கும், இளைஞர்களுக்கும், இளம்பெண்களுக்கும் எதிர்காலத்தில் வாழ்க்கை வளமாக வேண்டும் என்பதற்காக நானும், காங்கிரஸ் கட்சியும் உழைத்துக் கொண்டிருக்கிறோம். தமிழகத்தை ஆளுகின்ற மோசமான ஆட்சியை மோடி கொடுத்துக் கொண்டிருக்கிறார். தமிழக மக்களுக்கு நல்ல ஆட்சி கிடைத்தால் நல்ல பல காரியங்கள் கிடைக்கும் என்பதை உறுதியாக கூறுகிறேன்-என்றார்.



# ஒரே ரொக்கெட்டில் 143 செயற்கைக்கோள்

புளோரிடா, ஜன. 26

ஒரே ஏவூர்தி (ரொக்கெட்) மூலம் அதிக எண்ணிக்கையில் செயற்கைக்கோள்களை விண்வெளிக்கு அனுப்பியதில் உலக சாதனை படைக்கப்பட்டுள்ளது.

இதற்கு முந்திய இந்தியாவின் உலக சாதனையை இப்போது ஓர் அமெரிக்க நிறுவனம் முறியடித்துள்ளது.

அமெரிக்காவின் புளோரிடாவிலிருந்து ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் பால்கான் ஏவூர்தியிலிருந்து வேறுபட்ட வடிவங்கள் மற்றும் அளவுகள் கொண்ட மொத்தம் 143 செயற்கைக்கோள்கள் நேற்று முன் தினம் (ஜனவரி 24) வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டன.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) தன்னுடைய பி.எஸ்.எல்.வி. சி-37 ஏவூர்தி மூலம் 2017ஆம் ஆண்டு 104 செயற்கைக்கோள்களை விண்ணுக்கு அனுப்பிய உலக சாதனை இதன் மூலம், முறியடிக்கப்பட்டுள்ளது.

விண்வெளித்துறையில் நிகழ்ந்து வரும் மாற்றங்களுக்கு இது ஓர் எடுத்துக்காட்டாகப் பார்க்கப்படுகிறது. இது ஸ்பேஸ் எக்ஸ் போன்ற தனியார் நிறுவனங்கள் எதிர்காலத்தில் விண்வெளி ஆராய்ச்சியில் கோலோச்சும் என்பதற்கான அறிகுறியாக இருக்கிறது. மிகப் பெரிய ஆய்வுக்கூடங்களில் நூற்றுக்கணக்கான விஞ்ஞானிகளை கொண்டு மட்டுமே விண்வெளித்துறை சார்ந்த ஆராய்ச்சிகளில் ஈடுபட முடியும் என்ற காலம் மாறி, திறன்பேசி உள்ளிட்ட மின்னணு பொருட்களின் பாகங்களை கொண்டே அதிவேகமாக, சிறிய அளவில், குறைந்த செலவில், திறன் படைத்த செயற்கைக்கோள்களை யார் வேண்டுமானாலும் உருவாக்க முடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளதே இந்தப் புரட்சிக்கு காரணமாக உள்ளது.

# டில்லியை தொடர்ந்து மும்பையை முற்றுகையிட்டுள்ள விவசாயிகள்!

மும்பை, ஜன. 26

இந்திய மத்திய அரசின் சர்ச்சைக்குரிய மூன்று விவசாயச் சட்டங்களையும் திரும்பப் பெற வலியுறுத்தி கடந்த இரண்டு மாதங்களாக டில்லியின் எல்லைகளை முற்றுகையிட்டு இடம்பெற்றுவரும் விவசாயிகளின் போராட்டம் மும்பையிலும் விரிவடைந்துள்ளது.

டில்லியில் இடம்பெறும் போராட்டத்தில் பஞ்சாப், ஹரியாணா, ராஜஸ்தான் போன்ற வட மாநிலங்களைச் சேர்ந்த விவசாயிகளே பெருமளவில் பங்கேற்றுள்ளனர். இந்நிலையில், தென் மாநிலமான மகாராஷ்டிராவில் பல்லாயிரக்கணக் கான விவசாயிகள் நேற்று பெருமளவில் போராட்டத்தில் களமிறங்கினர். மகாராஷ்டிர தலைநகர் மும்பையில் நேற்று அவர்கள் ஒன்றுகூடினர்.

இதற்காக, மகாராஷ்டிர மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களைச்சேர்ந்த விவசாயிகள் பேரணியாக மும்பை நோக்கி வாகனப் பேரணி யாக வந்தடைந்தனர். இவர்கள் அனைவரும் நேற்று இந்திய அரசின் மூன்று விவசாயச்சட்டங்களை திரும்பப் பெற வலியுறுத்தி மும்பை ஆசாத் மைதானத்தில் ஒன்று கூடி கண்டனப் பொதுக்கூட்டத்தை நடத்தினர். தொடர்ந்து ஆளுநர் மாளிகைக்குச் சென்று தமது கோரிக்கையை வலியுறுத்தும் மகஜரைக்கையளித்தனர். வன்முறைகள் ஏதும் ஏற்படலாம் என்ற அச்சம் காரணமாக ஆயிரக்கணக்கில் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டன.





# பிரிஸ்பேன் மைதானத்தில் தேசிய கொடியுடன் நடந்தது பெருமை!

“பிரிஸ்பேன் மைதானத்தில் தேசியக் கொடியுடன் நடந்த தருணத்தை விவரிக்க வார்த்தைகளே இல்லை,” என வாஷிங்டன் சுந்தர் தெரிவித்தார்.

இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர் வாஷிங்டன் சுந்தர். கடந்த 2017 க்குப் பின் முதல் தரப் போட்டிக ளில் பங்கேற்காத இவர் அவுஸ்திரேலிய அணிக்கு எதி ரான பிரிஸ்பேன் டெஸ்டில் அறிமுகம் ஆனார். முதல் இன்னிங்சில் 62 ஓட்டங்கள் எடுத்த வாஷிங்டன், ஷர்துல் தாகூருடன் இணைந்து 123 ஓட்டங்கள் சேர்த் தார். இரண்டாவது இன்னிங்சில் வேகமாக 22 ஓட்டங்கள் எடுத்தார். தவிர பந்துவீச்சில் 4 விக்கெட் சாய்த்தார். இந்திய அணியின் வெற்றிக்கு இவரது சகலதுறை திறமை பெரிதும் உதவியது.

தற்போது இங்கிலாந்து அணிக்கு எதிரான முதல் இரு டெஸ்டில் பங்கேற்கும் இந்திய அணியில் சேர்க் கப்பட்டார். இதனால் பெப். 5 இல் தொடங்கும் சென்னை டெஸ்டில் அஷ்வினுடன் சேர்ந்து கள மிறங் குவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது குறித்து வாஷிங்டன் சுந்தர் கூறியது:

பிரிஸ்பேன் டெஸ்ட் முதல் நாளில் ஆடுகளம் சுழலுக்கு சற்றும் கைகொடுக்கவில்லை. இருப்பினும் ஸ்மித்தை எனது முதல் விக்கெட்டாக சாய்த்தது, கனவு நனவானது போல இருந்தது. இதேபோல முதல் இன் னிங்சில் ஷர்துல் தாகூர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். கடைசி நாளில் நான் துடுப்பாட் டம் செய்தபோது, மறுபக்கம் பந்த் இருந்தார். இதனால் பந்துவீச்சாளர்கள் நெருக்கடியில் தான் இருந்தனர். 25 அல்லது 30 ஓட்டங்கள் விரைவாக எடுத்து விட்டால், இலக்கை அடைய எளிதாக இருக்கும் என திட்டமிட்டு விளையாடினோம். கடைசியில் இந்திய அணி வெற்றி பெற்றதும், தேசியக் கொடியுடன் பிரிஸ்பேன் மைதா னத்தை சுற்றி வந்த அந்த தருணத்தை விவரிக்க வார்த் தைகளே இல்லை.

டெஸ்ட் அரங்கில் இந்திய அணியின் ஆரம்ப வீரராக களமிறங்க வாய்ப்பு கிடைத்தால் அது எனது அதிர்ஷ்டமாகத் தான் இருக்கும். நமது பயிற்சியாளர் ரவி சாஸ்திரி, டெஸ்டில் சாதித்தது போல, நானும் அந்த சவாலை ஏற்றுக் கொள்வேன் என நினைக்கி றேன். ஏனெனில், நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்டில் ஸ்பெஷலிஸ்ட் சுழற்பந்து வீச்சாளராக அறிமுகம் ஆனது, நான்கு விக்கெட் சாய்த்தது, 10ஆவது இடத் தில் களமிறங்கி துடுப்பாட்டம் செய்தது போன்ற தனது பல்வேறு சிறப்பான தருணங்களை எங்களிடம் பகிர்ந்து கொண்டுள்ளார் ரவி சாஸ்திரி.

தவிர அந்த இடத்தில் இருந்து டெஸ்டில் ஆரம்ப வீரராக மாறியது, உலகின் சிறந்த வேகப்பந்து வீச்சா ளர்களை எதிர்கொண்ட அனுபவங்களை தெரிவித் துள்ளார். அவரைப் போல நானும் ஆரம்ப வீரராக களமிறங்குவதை விரும்புகிறேன். இளம் வீரராக டெஸ் டில் களமிறங்கியபோது அணித்தலைவர் கோலி, ரோகித் சர்மா, ரகானே, அஷ்வின் என பல சிறப்பான வீரர்களை ‘ரோல் மாடலாக’ கண்டேன். இவர்கள் எப்போதும் நமக்கு ‘அட்வைஸ்’ செய்யத் தயாராக உள் ளனர். இவ்வாறு அவர் கூறினார்.

# அவுஸ்திரேலியா பயணம் வரப்பிரசாதம்!

அவுஸ்திரேலியா பயணம், எனக்கு கிடைத்த வரப்பிரசாதம்,” என, நடராஜன் கூறினார்.

அவுஸ்திரேலிய பயணத்தில் இந்திய அணியில் அறிமுகமாகி, மூன்று வகை போட்டியிலும் அசத் திய, தமிழக வேகப்பந்துவீச்சாளர் நடராஜன். சமீபத்தில் சொந்த ஊர் திரும்பினார்.

சேலத்தில் நிருபர்களிடம் நட ராஜன் தெரிவிக்கையில்-

என் வாழ்க்கையில், இதுபோன்ற வரவேற்பை பார்த்ததில்லை. ஊர் மக்களுக்கு நன்றி சொல்ல வேண் டும். என் வாழ்க்கையில், மறக்க முடியாத தருணம். நம் ஊருக்கு பெருமை சேர்க்க வேண்டும் என் பது கனவு. கடவுள் கொடுத்த வரம். அது, நல்லபடியாக நடந்தது. அளவு கடந்த மகிழ்ச்சி. அவுஸ்திரேலியா பயணத்தை வரப் பிரசாதமாக நினைக்கிறேன்.

ஐ.பி.எல். போட்டிகளில், வெளி நாடு, மற்ற மாநில வீரர்களுடன் இணைந்து விளையாடிய அனுபவம் கிடைத்தது. முதலில் கஷ்டமாக இருந்தது, பின்னர் பழகியது. தகவல் பரிமாற்றம் ஆகியவை, புது உத்வேகத்தை கொடுத்தன. ஹைத ராபாத் அணி தலைவராக, அவுஸ்தி ரேலியாவின் வோர்னர் இருந்தார். அவருக்கு நான் ஆஸ்திரேலியா வந்தது மகிழ்ச்சி. போட்டியின் போது சொன்னார், ‘நீ அதிர்ஷ்ட சாலி. உனக்கு மகள் பிறந்ததால் தான்



இப்படி நடந்துள்ளது’ என நண்பரா கப் பேசினார். அவுஸ்திரேலியாவி லும், வழக்கம்போல் பழகினார்.

ஒரு நாள் போட்டியில், திடீ ரென வாய்ப்பு கொடுத்ததை எதிர் பார்க்கவில்லை. அந்த வாய்ப்பை பயன்படுத்துவதில் குறியாக இருந் தேன். என் வேலையை சரியாக செய்ய நினைத்தேன். அப்போதைய மனநிலை, இப்போட்டியை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்பதில் இருந்தது. கடைசி இரு மாதம் கனவு மாதிரி அமைந்தது.

இந்திய அணி அறையில், பயிற் சியாளர், சக வீரர்களின் அணுகுமுறை சுப்பராக இருந்தது. எனக்கு அதி களவில் உதவி செய்தனர். வீரர்கள், ‘புது பையன் வந்துள்ளான்’ என, என்னை அனைவரும் உற்சாகப்ப டுத்தினர். நான், இவ்வளவு துாரம் வந்ததற்கு காரணமே அதுதான்.

அவர்கள் உதவி செய்ததால் மட் டுமே சாதிக்க முடிந்தது. ஆஸ்திரே லியா பயணமே, எனக்கு சாதனை தான். இந்திய அணி வெற்றி பெற்ற நிலையில், நான் ஓரமாகத்தான் நின் றிருந்தேன். கப்டன் விராட் கோலி கோப்பையை கொடுத்தபோது, கண்கலங்கிவிட்டேன். மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

கிராமப்புற இளைஞர்களுக்கு, கடின உழைப்பு தான் தேவை. என் வேலையில் கவனமாக இருந்து, இரவு, பகலாக உழைத்தேன். கஷ் டப்பட்டால் பலன் கிடைக்காமல் போகாது. அதை, என் வாழ்க்கை யில் பார்த்துள்ளேன். கடின உழைப்பு இருந்தால், தானாகவே முன்னெடுத்து செல்லும்.

விளையாடிய போட்டிகளில், இந்தியாவுக்கு வெற்றி கிடைத்தா லும், நான் மட்டும் ஆடவில்லை. 11 பேர் விளையாடினர். அனைவரும் உழைத்ததால் வெற்றி கிடைத்தது. எனக்கு கொடுத்த வாய்ப்பை பயன்படுத்தினேன். ‘யார்க்கர்’ நடராஜன் என அழைப்பதற்கு நன்றி.

இன்னும் சாதிக்க வேண்டியது எவ்வளவோ உள்ளது. தொடர்ந்து, மேலே செல்ல வேண்டும். என் கிராம மக்கள், என்னை அவர்கள் வீட்டுப் பிள்ளையாக பார்த்தனர். அவர்களுக்கு நன்றி.

இவ்வாறு, அவர் கூறினார்.

# ஆஸி. ஓபன் தனிமைப்படுத்தலில் உள்ளோரில் 9 பேருக்கு கொரோனா

அவுஸ்திரேலிய ஓபனுக்கு முன்னதாக தனிமைப்படுத் தப்பட்டுள்ள வீரர்கள் மற்றும் ஏனையோரின் கொவிட் தொற்று விவரங்கள் மறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

மெல்போர்னுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள ஆஸி. ஓபனில் பங்கெடுக்கும் வீரர்கள் மற்றும் ஆதரவு ஊழியர்கள் குழுவில் இதுவரை ஒன்பது பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர்கள் தற்போது மெல்போர்ன் ஹோட்டலில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அவுஸ்திரேலிய ஓபனுக்காக ஹோட்டல்களில் தனி மைப்படுதப்பட்டுள்ள 970 பேரில் பெரும்பாலானோர் 14 நாள் தனிமைப்படுத்தல் காலத்தின் இரண்டாவது வாரத்தில் நுழைந்துள்ளனர்.

அவர்களில் பெரும்பாலானவர்கள் ஒரு நாளைக்கு ஐந்து மணி நேரம் பயிற்சி பெற அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், சுமார் 72 வீரர்கள் தங்கள் அறைகளுக்குள் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஆரம்பத்தில் நான்கு வீரர்கள் கொரோனா தொற்றுக் குள்ளதாக அறிவிக்கப்பட்டது. எனினும் பின்னர் ஸ்பெய்ன் வீராங்கனையான பவுலா படோசா மாத்திரம் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதி செய்யப்பட்டது.

சோதனை முடிவு உறுதிசெய்யப்பட்டமையினால் படோசாவின் தனிமைப்படுத்தப்பட்ட காலம் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது. இதனால் 23 வயதான படோ சாவுக்கு பெப்ரவரி 8 ஆம் திகதி ஆரம்பமாகும் ஆஸி. ஓபனுக்காக ஆயத்தம் ஆவதற்கு நேரம் இல்லை.

# இந்திய அணிக்கு மரியாதை கொடுங்கள்



இந்திய அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் முழு அளவிலான பலத்துடன் இங்கிலாந்து அணி பங்கேற்க வேண்டும். இல்லை என்றால் அவர்களை அவமதித்து போல இருக்கும்,” என பீற்றர்சன் தெரிவித்தார்.

இந்திய மண்ணில் இங்கிலாந்து அணி நான்கு போட் டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்க உள்ளது. முதல் இரு டெஸ்ட் சென்னை சேப்பாக்கம் மைதானத் தில் நடக்கவுள்ளது. முதல் டெஸ்ட் பெப்ரவரி 5 இல் ஆரம்பிக்கவுள்ளது. இதற்கான இங்கிலாந்து அணியில் முன்னணி விக்கெட் காப்பாளர் பேர்ஸ்டோவிற்கு முதல் இரு போட்டியில் ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது. முதல் டெஸ்ட் போட்டிக்குப் பின் தனிப்பட்ட காரணங் களுக்காக பட்லர் நாடு திரும்புகிறார்.

இதற்கு இங்கிலாந்து அணி முன்னாள் தலைவர் பீற்றர்சன் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட ‘டுவிட்டர்’ செய்தி:

இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்டில் இடம் பெறும் வீரர்கள் விபரம் குறித்து பெரிய விவாதமே எழுந்துள்ளது. அவுஸ்திரேலியா வெல்வதைப் போல, இந்தியாவில் வெற்றி பெறுவது என்பதும் பெரிய மகிழ்ச் சியை கொடுக்கும். ஆனால் முன்னணி வீரர்கள் பங்கேற் காதது இங்கிலாந்து ரசிகர்களையும், இந்திய கிரிக் கெட் சபையையும் அவமரியாதை செய்யும் செயலா கும். முதல் டெஸ்டில் பேர்ஸ்டோவ் களமிறங்க வேண் டும். ஸ்டுவர்ட் பிராட், அண்டர்சனும் பங்கேற்கவேண்டும்.

இந்திய அணிக்கு எதிராக, அதன் சொந்தமண்ணில் முடிந்த வரை அதிக போட்டிகளில் பங்கேற்பதைத்தான் இங்கிலாந்து அணியின் சிறந்த வீரர்கள் விரும்புவர். அவர்களை அணியில் தேர்வு செய்யுங்கள். அதன் பிறகு ஐ.பி.எல்., அல்லது வேறு தொடர்களில் பங்கேற்றுபணம் பார்த்துக் கொள்ளலாம். இவ்வாறு பீற்றர்சன் கூறினார்.

இங்கிலாந்து அணி முன்னாள் கப்டன் நாசர் ஹூசைன் கூறுகையில், “இந்திய தொடரில் சுழற்பந்து வீச்சை சிறப் பாக எதிர்கொள்ளும் ஜோ ரூட், ஸ்டோக்சுடன் பேர்ஸ் டோவும் இடம் பெற வேண்டும். இவருக்கு முதல் இரு டெஸ்டில் ஓய்வு என்ற முடிவை இங்கிலாந்து மறுபரி சீலனை செய்ய வேண்டும்,” என்றார்.

# தவான் மீது நடவடிக்கையா?

தவானை பறவைகளுக்கு உணவு வழங்க அனுமதித்தவர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என நீதிபதி வேண்டுகோள் விடுத்துள்ளார். இந்திய கிரிக்கெட் அணி ஆரம்ப வீரர் ஷிகர் தவான். தனது இன்ஸ்டாகிராம் சமூக வலைத்தளத்தில், சிலபோட்டோக் கள் வெளியிட்டார். அதில் வாரணாசியில் படகுப் பயணத்தின் போது, தவான் பறவைகளுக்கு உணவு கொடுப்பது இடம் பெற்றிருந்தது. அதில்,‘பறவைகளுக்கு உணவு கொடுத்தது மகிழ்ச் சியாக இருந்தது.

தற்போது பறவைக் காய்ச்சல் பரவி வரும் நிலையில் தவானின் இந்தச்செயல் பலருக்கும் வியப்பாக இருந்தது. வாரணாசி மாவட்ட நீதிபதி கவுஷல் ராஜ் சர்மா கூறுகையில், “பொதுவாக சுற்றுலாப் பயணிகளுக்கு இங்குள்ள விதிகள் தெரியாது. சில படகோட்டி கள் விதிகளைப் பின்பற்றுவதில்லை எனத் தெரிகிறது. படகுப் பய ணத்தில் பறவைகளுக்கு உணவு கொடுக்க அனுமதிக்கின்றனர். -என்றார்.



# இலங்கை சுதந்திரதினம் தமிழர்களுக்கு கரிநாள்

## காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் வடக்கு - கிழக்கில் பேரணிக்கு அழைப்பு



**கொழும்பு,ஜன.26**

**இலங்கையின் சுதந்திர தினத்தை தமிழர்கள் கரி நாளாகப் பிரகடனப்படுத்தி வடக்கு - கிழக்கு தழுவிய எழுச்சிப் பேரணிகளை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அமைப்பின் பணிப்பாளர் பத்மநாதன் கருணாவதி தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பில் ஊடகங்களுக்கு அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில்:

"பெப்ரவரி நான்காம் திகதி தமிழர்களின் வரலாற்றில் என்றுமே மறக்க முடியாத கரி நாளாகும்.

ஆங்கிலேயர்களின் ஆதிக்கப் பிடியிலிருந்து தம்மை விடுவித்துக்கொண்ட இலங்கைத் தீவு தமிழர்களின் மீது இனவழிப்பைக் கட்டவிழ்த்துவிட்ட நாள். ஈழத் தமிழர்களின் உரிமைகளும், சுதந்திரமும் பறிக்கப்பட்ட நாளாகும்.

1948இல் ஆட்சிபீடம் ஏறிய சிங்கள, பௌத்த ஆட்சியாளர்களால் பல இலட்சக் கணக்கான தமிழர்கள் உயிரிழந்தும் எஞ்யவர்களின் உரிமைகளையும், உடமைகளையும் அழித்தொழித்து தமிழர்கள் தமது சொந்த நிலத்திலும், புலம் பெயர் நாடுகளிலும் அகதிகளாக வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

தமிழ் மக்களுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே நடைபெற்ற மோதல் என்பது ஒரு அரசாங்கம் சார்ந்தோ அல்லது கட்சி சார்ந்தோ நடைபெற்றதல்ல.

இலங்கை அரசாங்கம் தமிழ்த் தேசத்தை அழித்து ஒட்டுமொத்த இலங்கைத் தீவையும் சிங்கள பௌத்தர்களுக்கு மட்டும் உரித்தானதாக மாற்றியமைக்க முயற்சித்தபோது அதனை எதிர்த்து தமிழர் தமது அடையாளத்தைப் பாதுகாப்பதற்காகப் போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

ஆட்சிக்கு வந்த அனைத்து தரப்புக்களும் இலங்கைத்தீவு சிங்கள பௌத்த நாடு என்ற அடிப்படையிலேயே செயல்பட்டார்கள். இப்போதும் செயல்பட்டுக்கொண்டு உள்ளார்கள்.

2009இல் ஆயுத வழியில் நசுக்கப்பட்டு முடிவடைந்த போர் தமிழினப் படுகொலையோடு நிறைவுக்கு வந்திருந்தது. அத்தகைய தமிழினப் படுகொலை நடைபெற்றபோது அதனோடு நிகழ்ந்த பல குற்றங்களை மூடி மறைப்பதற்கு 2009 இல் ஆட்சியிலிருந்த அரசாங்கம் மட்டுமல்லாது சிங்கள தேசத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசாங்கத் தரப்புக்களுமே முயன்றனர். அதே சூழலே இன்றும் உள்ளது.

தமிழர்களின் சுதந்திரத்தையும், உரிமைகளையும் பறித்துவிட்டு சிங்கள தேசம் தனது 73ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதற்கு உள்நாட்டிலும், புலம்பெயர் தேசங்களிலும் தயாராகிக் கொண்டிருக்கின்றது. இவ்வாறான நிலைப்பாட்டில் தமிழர்களாகிய நாம் சுதந்திர தினத்தைப் புறக்கணித்து தமிழின அழிப்பிற்கு சர்வதேச நீதியைப் பெறுவோம்.

பொறுப்புக்கூறலும் தமிழ் மக்களுக்குரிய நீதியும் கிடைப்பதாக இருந்தால் முழுமையான சர்வதேச குற்றவியல் நீதிமன்ற விசாரணையூடாகவே சாத்தியமாகும். அவ்வகையான சர்வதேச குற்றவியல் விசாரணை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஊடாகவோ அல்லது சர்வதேச குற்றவியல் விசேட தீர்ப்பாயம் ஒன்றினூடாகவோ இலங்கையை உடன் விசாரிக்க வேண்டும்.

அந்தவகையில் இந்த இரண்டு பொறிமுறைகளில் ஏதாவது ஒன்றின் மூலமேனும் பாதிக்கப்பட்ட மக்களாகிய எமக்கு நீதி கிடைக்கும் என்பதில் நாம் உறுதியாக உள்ளோம்.

இனியாவது இலங்கையை விசாரிப்பதற்கு ஐ.நா. மனித உரிமைகள் பேரவை உள்ளிட்ட ஐ.நா. உறுப்பு நாடுகள் பாதுகாப்புச் சபைக்குப் பரிந்துரை செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தியும் பெப்ரவரி நான்காம் திகதி கரிநாளாகப் பிரகடனப்படுத்தி வடக்கு கிழக்கு தழுவிய மக்கள் எழுச்சிப் பேரணி நடத்த எமது அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது.

இதன்படி, எதிர்வரும் பெப்ரவரி நான்காம் திகதி, வடக்கு மாகாணத்தில் கிளிநொச்சியில் காலை 8-30 மணிக்கு கந்தசுவாமி ஆலய முன்றலில் பேரணி ஆரம்பமாகும். கிழக்கு மாகாணத்தில் சமநேரத்தில், மட்டக்களப்பு கல்லடி பாலத்தில் ஆரம்பமாகி காந்தி பூங்காவைச் சென்றடையும்.

இப்பேரணிக்கு மதகுருமார்கள், பொது அமைப்புக்கள், வர்த்தக சங்கங்கள், சமூக அமைப்புக்கள் மனித உரிமைச் செயல்பாட்டாளர்கள் பல்கலைக்கழக மாணவர்கள் என அனைவரும் தங்களது ஆதரவை வழங்கி சிங்கள தேசத்தின் சுதந்திர தினத்தைக் கரிநாளாகப் பிரகடனப்படுத்தி சர்வதேச விசாரணைக்கு வலுச்சேர்க்குமாறு அன்புரிமையுடன் வேண்டி நிக்கின்றோம்" என்று குறிப்பிட்டுள்ளார். (எ)

### கொரோனா நெருக்கடி:

# ஒரு வருடத்துக்கு எந்த தேர்தலும் நடைபெறாது

*மாத்தறை,ஜன.26*

நாட்டில் நிலவும் கொரோனா வைரஸ் தொற்று நெருக்கடியால் ஒரு வருடத்துக்கு எந்தத் தேர்தலும் நடைபெறாது என இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

மாத்தறை பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோது அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு: கொரோனா வைரஸ் தொற்றின் இரண்டாவது அலையை கட்டுப்படுத்த அரசாங்கம் தவறிவிட்டது என்று முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் ஏற்புடையதல்ல.

முதலாவது அலையை முடக்க கட்டுப்பாடுகள் மூலம் முடிந்தது. ஆனால், பொருளாதாரத்தையும் நாட்டையும் தொடர்ந்து நிறுத்திவைக்க முடியாது.

2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தாக்குதல், சுற்றுலாத் துறை மூலம் கிடைக்கும் சுமார் 5 பில்லியன் அமெரிக்க டொலர் வருவாயை இலங்கை இழக்க காரணமாக அமைந்தது.

இந்தத் தாக்குதல்களுக்குப் பின்னர் நாட்டுக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை கணிசமாகக் குறைந்துவிட்டது. அன்றிலிருந்து அத்துறை மீளவில்லை.

நாடு பெரும் கடன் சுமையில் இருந்தபோது இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. இருப்பினும் பொருளாதாரத்தை வலுப்படுத்தவும் வட்டி விகிதத்தைக் குறைக்கவும் முடிந்துள்ளது- என்றார். (எ)

# கொரோனா தடுப்பூசி வழங்குவதில் யாருக்கும் விசேட சலுகையில்லை

## இராஜாங்க அமைச்சர் திட்டவட்டம்

*கொழும்பு,ஜன.26*

கொரோனா தடுப்பூசிகளை வழங்குவதற்கு சுகாதார அமைச்சால் ஒழுங்குமுறையொன்று திட்டமிடப்பட்டுள்ளது. எனவே தனவந்தர்களுக்கோ அல்லது அதிகாரமுடையவர்களுக்கோ விசேட சலுகைகள் எவையும் வழங்கப்பட மாட்டாது என்று ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண தெரிவித்தார்.

உலகின் பல நாடுகளிலும் தயாரிக்கப்பட்ட கொரோனா தடுப்பு மருந்துகளில் ஒக்ஸ்போர்ட் அஸ்ராசெனேகா தடுப்பு மருந்தே பக்க விளைவுகள் மிகக் குறைவானதாகும்.

மில்லியனில் ஒருவருக்கே இதன் மூலம் பக்க விளைவு ஏற்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. எனவே இந்த தடுப்பூசி மூலம் பாரிய பக்க விளைவுகள் ஏற்படக் கூடும் என்று யாரும் வீண் அச்சம் கொள்ளத் தேவையில்லை.

இலங்கையில் கொரோனா தடுப்பூசி வழங்குவதற்கான ஏற்பாடுகள் தொடர்பில் ஊடகங்களுக்கு தெளிவுபடுத்துகையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

18 வயதுக்கு மேற்பட்டோருக்கே தடுப்பூசி வழங்கப்படும். இலங்கையில் மொத்த சனத்தொகையில் மூன்றில் இரண்டுக்கும் அதிகமானோர் 18 வயதுக்கு மேற்பட்டோராவர். அதற்கமையவே 65 வீதமானோருக்கு தடுப்பூசி வழங்க எதிர்பார்த்துள்ளோம்.

முதற்கட்டமாக வைத்தியர்கள் , தாதிகள், பொது சுகாதார பரிசோதகர்கள் உள்ளிட்டோருக்கும் , இரண்டாம் கட்டமாக முப்படையினர் மற்றும் பொலிஸாருக்கும் , மூன்றாம் கட்டமாக 65 வயதுக்கு மேற்பட்ட தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டோருக்கும் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு திட்டமிட்டுள்ள ஒழுங்கு விதிமுறை மீறி யாருக்கும் தடுப்பூசி வழங்கப்பட மாட்டாது. அதாவது பணத்தை வழங்குபவர்களுக்கோ அதிகாரத்திலுள்ளவர்களுக்கோ தடுப்பூசி வழங்குவதில் எந்த சலுகையும் வழங்கப்படமாட்டாது.

இந்தியாவைத் தொடர்ந்து சீனா மற்றும் ரஷ்யாவிலிருந்து தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்வதற்கான இராஜதந்திரமட்டத்தில் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அத்தோடு உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஊடாகவும் மொத்த சனத்தொகையில் 20 வீதமானோருக்கும் தடுப்பூசி இலவசமாக வழங்கப்படும். இவற்றின் பின்னர் பற்றாக்குறை ஏற்படும்பட்சத்தில் அதனை பணம் கொடுத்து கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

உலகின் பல நாடுகளிலும் தயாரிக்கப்பட்ட கொரோனா தடுப்பு மருந்துகளில் ஒக்ஸ்போர்ட் தடுப்பு மருந்து பக்க விளைவுகள் குறைவானதாகும்.

இது வரையில் வழங்கப்பட்டுள்ள ஒக்ஸ்போர்ட் தடுப்பு மருந்தினால் பாரிய பக்க விளைவுகள் எவையும் ஏற்படவில்லை. எனினும் மயக்கமடைதல் உள்ளிட்ட ஏதேனுமொரு பக்க விளைவு ஏற்பட்டால் அதற்கு முகங்கொடுப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

எவ்வாறிருப்பினும் சர்வதேச மதிப்பீட்டின்படி மில்லியனுக்கு ஒன்று அல்லது இரண்டு என்ற அடிப்படையிலேயே இவ்வாறு பக்க விளைவுகள் ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

எனவே இது குறித்து வீண் அச்சம் கொள்ளத் தேவையில்லை. கொரோனா வைரஸ் மற்றும் அண்மையில் உருவாகிய உருமாறிய வைரஸ் என்பவற்றுக்கு ஒக்ஸ்போர்ட் தடுப்பூசி ஈடுகொடுக்கக் கூடியது என நிரூபிக்கப்பட்டுள்ளது- என்றார். (எ)

# போதைப்பொருள் பணியக அதிகாரியை

## கைதுசெய்ய பணிப்பு

*கொழும்பு,ஜன.26*

பொலிஸ் போதைப் பொருள் பணியகத்தின் அதிகாரிகள் சம்பந்தப்பட்ட போதைப்பொருள் வழக்கின் 14 ஆவது சந்தேக நபரான உதார சம்பத்தை இன்டர்போல் உதவியினூடாக கைது செய்ய நீதிமன்றம் சிவப்பு அறிவித்தல் பிறப்பித்துள்ளது.

இந்த உத்தரவை கொழும்பு தலைமை நீதிவான் மொஹமட் மிஹெய்ல் நேற்றுக் காலை பிறப்பித்தார். (எ)




# இலங்கை அரச படைகளுக்கு சர்வதேச பயிற்சி வேண்டாம்




**கொழும்பு,ஜன.26**

**இலங்கை உட்பட அடக்குமுறையில் ஈடுபடும் அரச படைகளுக்கான பயிற்சித் திட்டங்களை உடன் நிறுத்துமாறு இங்கிலாந்து அரசுக்கு, ஆயுத வர்த்தகத்துக்கு எதிரான பிரசாரம் என்ற அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.**

அத்துடன் பொலிஸ் கல்லூரி வழங்கும் அனைத்து சர்வதேசப் பயிற்சிகளையும் மதிப்பாய்வு செய்யுமாறும் அந்த அமைப்பு கோரியுள்ளது.

2012 இல் கல்லூரி நிறுவப்பட்டதிலிருந்து குறைந்தபட்சம் 76 நாடுகளுக்கு பயிற்சி மற்றும் உதவிகளை வழங்கியுள்ளதாக ஆயுத வர்த்தகத்துக்கு எதிரான பிரசாரம் அமைப்பு தெரிவித்துள்ளது.

அத்துடன் வெளிநாட்டு மற்றும் கொமன்வெல்த் அலுவலகத்தால் மனித உரிமைகள் கவனிக்கப்படும் நாடுகளாகப் பட்டியலிடப்பட்ட 12 நாடுகளுக்கும் இவ்வாறு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான், பஹ்ரைன், சீனா, கொலம்பியா, எகிப்து, லிபியா, பாகிஸ்தான், ருவாண்டா, சவுதி அரேபியா, சோமாலியா, இலங்கை மற்றும் சூடான் ஆகிய நாடுகள் இந்தப் பட்டியலில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைவிட சித்திரவதைக் குற்றச்சாட்டுக்கு உள்ளான பொலிஸ் படைகளைக் கொண்ட பல நாடுகளும் பட்டியலிடப்பட்டுள்ளன.

இவை வெளியுறவு மற்றும் கொமன்வெல்த் அலுவலகத்தின் பட்டியலில் இல்லை. ஆனால் இவற்றில் இங்கிலாந்து ஆயுதங்களை வாங்கும் நாடுகளும் உள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஆயுத வர்த்தகத்துக்கு எதிரான பிரசாரத்தின் செய்தித் தொடர்பாளர் அன்ட்ரூ ஸ்மித் தெரிவிக்கையில்:

பொலிஸ் படைகளில் பல சித்திரவதை மற்றும் பிற முறைகேடுகள் பற்றி குற்றம் சாட்டப்பட்டுள்ளன. அத்துடன் மிருகத்தனமான மற்றும் அடக்குமுறைச் சட்டங்களை நிலைநிறுத்த அவர்கள் தங்கள் சக்தியைப் பயன்படுத்துகிறார்கள்.

இங்கிலாந்து அவர்களுடன் ஒத்துழைக்கவோ அல்லது அவர்களின் சர்வாதிகார ஆட்சியை வலுப்படுத்தவோ கூடாது.

அமெரிக்காவில் கறுப்பினத்தவரான ஜோர்ஜ் ப்ளொய்ட்டின் கொலை மற்றும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட அடக்குமுறைகள் மாநில வன்முறைக்கு வழிவகுத்ததுடன் சர்வதேச கவனத்தை ஈர்த்தன.

ஆனால் இது அமெரிக்காவில் மட்டுமுள்ள பிரச்னையல்ல. இது உலகம் முழுவதும் நடக்கிறது. பாசாங்குத்தனத்துக்கு ஒரு முடிவு இருக்க வேண்டும்.

இந்நிலையில் எந்த பொலிஸ் படைகளுக்கு இங்கிலாந்து பயிற்சியளித்தது என்பதையும், மனித உரிமை மீறல்களில் அந்தப் படைகள் ஈடுபட்டுள்ளனவா என்பது தொடர்பில் ஒரு முழு மதிப்பாய்வு இருக்க வேண்டும்.

இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பில் கவலைகளை எழுப்பிய போதிலும் இங்கிலாந்து தனது ஆயுத ஒப்பந்தங்களையும் இலங்கையுடனான இராணுவப் பயிற்சி நடவடிக்கைகளையும் தொடர்ந்து பராமரித்து வருகிறது என்று குறிப்பிட்டுள்ளார். (எ)

## இந்திய மீனவர்கள் மூவர் நீதிமன்றினால் விடுதலை

*யாழ்ப்பாணம், ஜன. 26*

காங்கேசன்துறை கடற்படைத் தளத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் மூவருக்கு ஒத்திவைக்கப்பட்ட கடூழியச் சிறைத்தண்டனைத் தீர்ப்பு வழங்கி மல்லாகம் நீதிமன்றம் நேற்று விடுதலை செய்து தீர்ப்பு வழங்கியுள்ளது.

நாட்டுப் படகில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த அவர்கள் எல்லை தாண்டிய மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தமையால் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அவர்கள் மூவரும் நேற்று மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையிலேயே விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, அவர்களின் படகு உட்பட்ட பொருட்களை கையளிப்பது தொடர்பிலான வழக்கு விசாரணை எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறும் என்றும் நீதிமன்றத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தம்புள்ளையில் மோதல் 3 பேர் காயம்; 18 பேர் கைது

*கொழும்பு, ஜன. 26*

இரு தரப்பினருக்கிடையே நடைபெற்ற மோதலில் மூன்று பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என தம்புள்ளை பிரதேசத்தில் பதிவாகின்றது.

தம்புள்ளை- கண்டலம- கெப்பெல்ல பிரதேசத்தில் நடைபெற்ற பருவமடைதல் நிகழ்வில் கலந்துகொண்ட சிலருக்கும், மரண சடங்கில் கலந்துகொண்ட சிலருக்கும் இடையில் இந்த மோதல் நடைபெற்றுள்ளதாக கூறப்பட்டது.

குறித்த மோதலில் ஈடுபட்டதாக கருதப்படும் சந்தேக நபர்கள் 18 பேரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

**விண்ணக வாழ்வில் ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி**



**மலர்வு 13.10.1932** | **உதிர்வு 25.01.2016**

**திருமதி**
**பரமேஸ்வரி பாக்கியநாதர்**
**(பாக்கியம்)**

**சீவியத்தில் என்னை நேசித்தவர்களே**
**மரணத்திலும் எனை மறவாதிருப்பீர்களாக**
**தரணிக்கு எம்மை அறிமுகமாக்கி**
**சுகமான சுமைகளாய்**
**எமைத் தாங்கி நின்ற அன்புத் தாயே**
**எம்மோடு நீங்கள் வாழ்ந்த காலங்கள்**
**என்றும் எமக்கு வசந்த காலங்களே**
**எங்களை விட்டுப் பிரிந்து**
**ஆண்டுகள் ஐந்து கழிந்திடினும்**
**நாம் வாழும் வரை உங்கள்**
**நினைவுகள் வாழும்**

**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,**
**உறவினர், நண்பர்கள்.**

## ஐக்கிய மக்கள் சக்தியில் சம்பிக்க நேற்று இணைவு

*கொழும்பு,ஜன.26*

முன்னாள் அமைச்சர் பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க, ஐக்கிய மக்கள் சக்தியில் நேற்று உத்தியோகபூர்வமாக இணைந்து கொண்டார்.

அவருக்கு உறுப்புரிமை வழங்க ஏற்கனவே செயல்குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது என கட்சியின் ஊடகப் பேச்சாளர் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

மேலும் அடுத்த வாரம் இடம்பெறவுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் செயல்குழுக் கூட்டத்தில் கலந்துகொள்வார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்தும் கட்சியின் உறுப்பினர் பதவியிலிருந்தும் கடந்த டிசெம்பரில் சம்பிக்க ரணவக்க விலகியிருந்தார். இந்நிலையிலேயே நேற்று ஐக்கிய மக்கள் சக்தியில் சம்பிக்க உறுப்புரிமையைப் பெற்றுக்கொண்டார். (எ)

## கொரோனா தொற்றிலிருந்து 50, 337 பேர் குணமடைவு

*கொழும்பு,ஜன.26*

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 50 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

நேற்று மாலை 5 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணிநேரத்தில் மட்டும் மேலும் 621 பேர் குணமடைந்துள்ள நிலையில் 50 ஆயிரத்து 337 பேர் இதுவரை குணமடைந்துள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

நாட்டில் இதுவரை கொரோனா தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை 58 ஆயிரத்து 430 ஆக உயர்ந்துள்ளது.

இதில் 7 ஆயிரத்து 810 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவரும் அதேவேளை 783 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் மருத்துவக் கண்காணிப்பில் உள்ளனர். (எ)

## ரோஹித மீதான ஊழல் வழக்கு பெப்ரவரியில் விசாரணைக்கு

*கொழும்பு, ஜன. 26*

அமைச்சர் ரோஹித அபேகுணவர்தனவுக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி மேல் நீதிமன்றத்தில் இந்த வழக்கு பெப்ரவரி 5 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும் என நீதிபதி அறிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சியில் 41.2



மில்லியன் ரூபா மதிப்புள்ள சொத்துக்களை சட்டவிரோதமாக கையகப்படுத்தினார் என இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

## ‘சுகாதாரமான கிளிநொச்சி’ செயல்திட்டம் முன்னெடுப்பு

*கிளிநொச்சி, ஜன. 26*

சுகாதாரமான கிளிநொச்சி எனும் தொனிப் பொருளில் கிளிநொச்சி றோட்டறிக் கழகத்தினால் செயல்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு முன்பாக இடம்பெற்ற நேற்றைய நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், மேலதிக அரசாங்க அதிபர்கள், பதவிநிலை அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் இந்த பங்குகொண்டனர்.

தன்னார்வத்துடன் இயங்கும் இளைஞர் குழுமத்திற்கு அரசாங்க அதிபர் இதன்போது வாழ்த்துக்களை தெரிவித்தது டன் அவர்கள் தமது பணியை சிறப்புற முன்னெடுத்துச் செல்வதற்கான முழுமையான ஆதரவை வழங்குவதாகவும் தெரிவித்தார்.

ஈழநாடு
Eelanadu

# பெண்ணிடம் அறுத்த சங்கிலியை விற்ற பணத்தில் புதிய கைபேசிகள்!

## பொலிஸாரிடம் வசமாக சிக்கிய இளைஞர்

யாழ்ப்பாணம், ஜன. 26

கல்வியங்காடு பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த தாய், மகளிடம் சங்கிலி அறுத்தார் என்ற சந்தேகத்தில் இளைஞன் ஒருவர் யாழ்ப்பாணம் மாவட்ட புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரியினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இரண்டரைப் பவுண் தங்கச் சங்கிலியை கடந்த சனிக்கிழமை மாலை அறுத்துச் சென்ற இளைஞன், அதனை விற்றுவிட்டு சுமார் 75 ஆயிரம் ரூபாய் மற்றும் 25 ஆயிரம் ரூபாய் பெறுமதியில் இரண்டு கைபேசிகளை வாங்கியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் அறிய வருவதாவது:

“கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்வியங்காடு பகுதியில் வயோதிப் பெண்ணும் அவரது மகளும் மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளனர். அவர்களைப் பின்தொடர்ந்த ஒருவர் தாயாரிடமிருந்து இரண்டரைப் பவுண் தங்கச் சங்கிலியை அறுத்துக்கொண்டு தப்பியுள்ளார்.

இதுதொடர்பில் தகவல் அறிந்த யாழ். பொலிஸ் புலனாய்வு பிரிவு விசாரணைகளை முன்னெடுததது. சம்பவ இடத்துக்கு அண்மையாக உள்ள சி.சி.ரீ.வி. பதிவின் அடிப்படையில் குறித்த அடையாளம் காணப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

கொக்குவிலைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞனே நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார். அவரது உடைமையில் கைபேசிகள் கைப்பற்றப்பட்டன. சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## அரசாங்கம் மீது போர் குற்றமா?

# தமிழ் கட்சிகளுக்கு எதிராக யாழில் சிலர் போராட்டம்!

## சிங்கள மொழியிலும் பதாதை, கோஷம்!

யாழ்ப்பாணம், ஜன. 26

**தமிழ்த் தேசிய கட்சிகள் இலங்கை அரசு மீது மட்டும் போர் குற்றச்சாட்டை முன் வைத்து ஐ.நா. மனித உரிமைகள் சபையிடம் விசாரணைக்கு வலியுறுத்தும் நிலைப்பாட்டை எதிர்த்து சிலர் திடீர் போராட்டம் ஒன்றை நடத்தினர்.**



யாழ்ப்பாணம் நகரில் நேற்று முற்பகல் வாகனத்தில் கொண்டு வந்து இறக்கப்பட்ட சிலர் திடீரென இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர். இவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மற்றும் தமிழ் ஆயுதக் குழுக்களின் நடவடிக்கைகள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதைத் தங்கள் கோரிக்கையாக முன்வைத்தனர்.

குறிப்பாக, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரின் ஒளிப்படங்கள் அடங்கிய பதாகையை ஏந்தி இருந்த போராட்டக்காரர்கள் கூட்டமைப்புக்கு எதிரான வாசகங்கள் அடங்கிய பதாகைகளையும் ஏந்தியிருந்தனர்.

எதிர்வரும் மாதம் ஜெனிவா கூட்டத்தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில் தமிழ் கட்சிகள் பக்கச்சார்பாக செயல்படுகின்றன என்றும், ஜெனிவாவில் விடுதலைப் புலிகள் மற்றும் ஆயுதக் குழுக்களால் மேற்கொள்ளப்பட்ட கடத்தல், கொலை விடயங்களும் விசாரணைக்கு எடுக்க வேண்டும் எனவும் போராட்டக்காரர்கள் வலியுறுத்தினர்.

போராட்டத்தை நடத்தியவர்களில் கடந்த பாராளுமன்ற தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் போட்டியிட்ட ஒருவரும் இருந்தார். அத்துடன் போராட்டக்காரர்கள் சிங்கள மொழியிலான பதாதைகளையும் ஏந்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)






இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.01.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.